பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 26 சனிக்கிழமை (12.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 351

# அவசரகாலச் சட்டம் நாளை காலாவதி தேவை எனில் மீண்டும் நடைமுறைக்கு!

## ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்

கொழும்பு,நவ.12

வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து நாட்டில் மீண்டும் கொண்டுவரப்பட்டு,கடந்த சுமார் மூன்று மாதங்களாக நடைமுறையில் இருந்த அவசரகால நிலைமை நாளை நள்ளிரவுடன் காலாவதியாகின்றது.

அவசரகால நிலைமை இல்லாத சாதாரண நிலைமைகளின் கீழ் - ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை நடத்துவதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அத்தியாவசிய தேவை ஏற்பட்டால் அவசரகால நிலைமையை உடனடியாகப் பிரகடனப்படுத்தத் தாம் பின்நிற்பதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருக்கின்றார் எனவும் தெரிகின்றது.

கடந்த மாதம் நாடாளுமன்றப் பிரேரணை மூலம் மூன்றாவது தடவையாக ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்ட அவசரகால நிலைமை நாளை நள்ளிரவுடன் காலாவதியாகின்றது. அதற்கிடையில் நாடாளுமன்றம் கூடி அதை மேலும் நீடிப்பதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை. அத்தகைய திட்டமும் அரசுக்கு இல்லை.

அதேவேளை, நாளை நள்ளிரவு அவசரகால நிலை காலாவதியான பின்னர், தமது விசேட உத்தரவு மூலம் புதிதாக அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தும் எண்ணமும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இல்லை என்று கூறப்படுகின்றது. சாதாரண நிலைமைகளின் கீழ் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இடம்பெறுவதையே அவர் விரும்புகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்த்தரப்பு ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்து உரையாடியபோது இவ்விடயம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

அவசரகால நிலையைக் காலாவதியாக விட்டு, சாதாரண நிலைமைகளின்கீழ் வாக்களிப்பை நடத்த இடமளிப்பது என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். சிறைச்சாலையிலிருந்து 2 கைதிகள் கடத்தப்பட்டனர்!

## பார்வையாளர் வேடத்தில் பிஸ்டலுடன் உள்ளே நுழைந்த நபர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,நவம்பர்12

**யாழ்.நகரில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிறைச்சாலையினுள் நேற்று மாலை துப்பாக்கியுடன் நுழைந்த நபர்கள் அங்கிருந்த விளக்கமறியல் கைதிகளில் இருவரை ஆயுதமுனையில் கடத்திக்கொண்டு தப்பிச் சென்றனர்.**

**கடத்தப்பட்ட கைதிகள் இருவரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.**

நேற்று மாலை 4.45 மணியளவில் - கைதிகளை உறவினர்கள் பார்வையிடச் செல்லும் நேரத்தில் - பிஸ்டலுடன் உள்நுழைந்த இருவரே சிறைக் காவலர்களை மிரட்டி விட்டு குறிப்பிட்ட இரு கைதிகளையும் மீட்டுக் கொண்டு சென்றனர் என்று கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட கைதிகள் இருவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முக்கிய கைதிகள் ஆவர். அவர்களில் கணேஸ் கமலநாதன் என்பவர் சில வாரங்களுக்கு முன்பு வடமராட்சி இன்பருட்டி கடற்பகுதியில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபரான இவர், பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நேற்று டாக்கா பயணம்

கொழும்பு,நவ.12

இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் இன்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கூடும் 13 ஆவது 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமாலை புறப்பட்டார்.

'சார்க்' வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழு அங்கு சென்றிருந்தது.

இன்னும் சில தினங்களில் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தெற்காசிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இதுவரை காலம் அவர்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் ஹெலி வயலில் இறங்கியது

கொழும்பு,நவ.12

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பயணம் செய்த ஹெலிகொப்டர் வயல் வெளியில் இறங்கியது. சீரற்ற காலநிலையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறையில் நடைபெறும் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக நேற்றுக்காலை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்றில் பிரதமர் புறப்பட்டார். ஹெலிகொப்டர் இரத்தினபுரி பிரதேசத்துக்கு மேலால் சென்று கொண்டிருந்தபோது கடுமையான பனிமூட்டம் காணப்பட்டது. அடைமழையும் பெய்துகொண்டிருந்தது.

ஹெலிகொப்டரை கட்டுப்படுத்த முடியாத

(16ஆம் பக்கம் பார்க்க)

## 72 பாடசாலைகளின் மாணவர் பிரதிநிதிகள் ஒன்று திரண்டு நடத்திய எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.12

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டிலுள்ள 72 உயர்தரப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்ட பெரும் எழுச்சி மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

தமிழ்மாணவர் ஒன்றியத்தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் நேற்றுக்காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த மாநாடு ஆரம்பமானது. பொதுச் சுடரை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் திருமதி ரேணுகா, கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி இ.தனபாலன், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி என்.நிருஷாராணி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியை யாழ்.மத்திய கல்லூரி மாணவன் சி. ரங்கேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ்.வசீகரன் வரவேற்பு நடனம் நிகழ்த்தினார். வரவேற்புரையை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கே.ஜனந்தனும், தலைமை உரையை தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரனும், வாழ்த்துரையை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் நிகழ்த்தினார்கள்.

இதனையடுத்து இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

பிரகடனம், படங்கள் 2ஆம் பக்கத்தில்.

## திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நேற்று கான்ஸ்டபிள் மரணம்!

### இனந்தெரியாத நபர்கள் சூடு

யாழ்ப்பாணம்,நவ.12

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார். இதனால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக திருநெல்வேலி சந்தை கலைந்தது. கடைகள் இழுத்து மூடப்பட்டன.

பொலீஸ் 'பிக் அப்' வாகனம் ஒன்றில் அச்சுவேலியில் இருந்து வந்த பொலீஸ் குழுவினர் சந்தைப் பகுதியில் மரக்கறி கொள்வனவு செய்துகொண்டிருந்த சமயம் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத நபர்கள் பொலீஸாரை நோக்கி பிஸ்டலால் சுட்டதில் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார். யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் அங்கு சிகிச்சையின்போது உயிரிழந்தார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து திருநெல்வேலிப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. சந்தையில் வியாபார நடவடிக்கைகளைக் கைவிட்டு வியாபாரிகள் அவசர அவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிராக நவீன், மொறகொட போன்றோர் சதி!

### பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறார் மகேஸ்வரன்

கொழும்பு,நவ.12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை அகற்றி அப்புறப்படுத்துவதற்கு கட்சிக்குள் சிலர் சதிசெய்கின்றனர்.

தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கு கிடைப்பதைத் தடுக்கும் நோக்கில் அவர்கள் கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டு வருகின்றனர்.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரன்.


அவிசாவளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் மகேஸ்வரன் உரையாற்றினார். அப்போது ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு எதிரானவர் என்றவாறு கட்சிப் பிரமுகர்கள் சிலர் வெளியிட்டுவரும் கருத்துக்களை அவர் சாடினார்.

நவீன் திஸநாயக்கா, மிலிந்த மொறகொட ஆகியோர் ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிராகச் சதிசெய்கின்றனர் என்று அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார் மகேஸ்வரன்.


(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாணவர் எழுச்சி மாநாட்டின்போது...



மத்திய கல்லூரி மாணவன் கி.ரங்கேஸ்வரன் தேசியக் கொடி ஏற்றுகிறார்....





பொதுச்சுடரினை ஏற்றும் துணைவேந்தர் சு.மோகனதாஸ், வேம்படி மகளிர் மாணவி என்.நிருஷாராணி.



மேடையில் பிரமுகர்கள்



அரங்க நிகழ்வின்போது..





நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள்

படங்கள் : பிரபா

# தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே இயல்பான, சுதந்திரமான கல்வி சாத்தியம்

## மாணவர் எழுச்சி மாநாட்டுப் பிரகடனத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

தமிழ்த்தேசிய நோக்கிலான இயல்பானதும், சுதந்திரமானதுமான கல்வி தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும்.

நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரகடனம் வருமாறு:-

தமிழ் மக்கள் தமது தாயகத்தில் நீண்ட கல்விப் பாரம்பரியத்துடன் வாழ்ந்து வருபவர்கள். எத்தகைய நிலையிருந்தாலும் தம் சந்ததியின் கல்விக்கே முன்னுரிமை அளித்து வருபவர்கள். இதன் காரணமாக நல்ல விழுமியங்களுடன் ஒழுக்கத்தில் உயர்ந்து நாகரிகமுடைய குடிமக்களாகத் திகழ்பவர்கள். அத்துடன் அக்கல்வியையே மூலதனமாகக் கொண்டு தம் வாழ்வை வளமுள்ளதாக அமைத்து வாழ்பவர்கள். சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கைத்தீவின் அரசதுறைகளில் அதிகளவில் பணிகளைப் பெற்றிருந்ததுடன், உயர் பதவிகளிலும் அவர்களே நிறைந்திருந்தனர். 1970களுக்கு முன் இலங்கையில் பல்கலைக்கழகங்களில் அனைத்துப்பீடங்களிலும் தமிழ் மாணவர்களே பெரும்பான்மையாக இருந்தனர். வெளிநாடுகளில் உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெறவும் சொந்தத் தொழில் முயற்சிகளில் முன்னேறவும் அக்கல்வி அடிப்படையாகவும் அமைந்திருந்தது. இதனால் இந்தத் தீவில் சமூக, பொருளாதார முன்னேற்றம் கொண்ட இனமாகத் தமிழினம் மிளிரமுடிந்தது. தமிழ் மக்கள் பெற்றிருந்த கல்வியறிவானது சுதந்திர உணர்வையும் விடுதலை வேட்கையையும் அவர்களிடத்தே இயல்பாகவே தோற்றுவித்திருந்தது.

சுதந்திரத்திற்குப்பின்....

சுதந்திரத்துக்குப்பின் வேகம்பெற்ற பௌத்த சிங்களப் பேரினவாதம் தமிழர்களைப் பல வழிகளிலும் ஒடுக்க கங்கணம் கட்டி நின்றது. தமிழர்களின் இருப்பை அழிக்கவேண்டுமானால் அதற்கு அத்திபாரமாக இருக்கும் அவர்களின் கல்வித் தளத்தை சிதைக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் கல்வியைச் சிதைப்பதற்கான பல நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொண்டனர்; மேற்கொண்டுவருகின்றனர். இதன் ஓர் அங்கமே எமது அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ். நூலகம் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் யாவும் சிங்கள அமைச்சர் காமினி திஸநாயக்க தலைமையில் சிங்கள காடையர்களால் எரியூட்டப்பட்டன. திட்டமிட்ட கல்விச் சீரழிப்பு நடவடிக்கைகளால் தமிழர்களின் கல்வித்தரம் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்து வருகின்றது. கல்வித் தரத்தில் முதலிடத்தில் இருந்த யாழ்.மாவட்டம் இன்று பதின்நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டதுடன் தரப்படுத்தலை எதிர்த்து நின்ற தமிழ்மக்கள் இன்று தரப்படுத்தல் ஊடாக பல்கலைக்கழகத்தில் இடங்களைப் பெற ஏங்கி நிற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் கல்வியை எவ்வாறு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு அழித்து வருகின்றது என்பதற்கு சில எடுத்துக்காட்டுக்கள் :-

- பல ஆயிரக்கணக்கான குடும்பங்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவம் விரட்டியடித்து அகதிகளாக்கி அவர்களின் இயல்பான கல்விச் சூழலைப் பாழாக்கியுள்ளதுடன் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும் ஆக்கிரமித்துள்ளது -
- பாடசாலைகளைக் கூட விட்டுவைக்காது குண்டுவீசித் தகர்த்ததுடன், அவற்றை மீளமைப்பதற்கு உதவிகள் வழங்காது மாணவர்கள் கூடாரங்களிலும் மர நிழல்களிலும் கற்கும் நிலை காணப்படுதல் -
- பாடசாலைகளைச் சுற்றி காவலரண்கள், தடைகள், கெடுபிடிகள் மூலம் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளவளத்தைப் பாதிக்கச் செய்து மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தலுக்கு இடையூறுகள் ஏற்படுத்தி வருதல் -
- சிங்கள இராணுவமும் தமிழர் தாயப் பிரதேசத்தில் யுத்த பீதியைத் திட்டமிட்டு உருவாக்கி இயல்பான கற்றல் நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவித்து வருதல் -
- தமிழ் பாடநூல்களைப் பொருத்தமற்ற முறையில் உருவாக்குவதுடன், உரிய காலத்தில் பாடநூல்களைத் தமிழ் மாணவர்களுக்கு வழங்காது இழுத்தடித்து மாணவர்களின் கல்வியடைவில் வீழ்ச்சியை ஏற்படுத்தல் -
- தமிழ் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதிக வளங்களையும் கற்றல், கற்பித்தல் சாதனங்களையும் போதியளவு வழங்காது புறக்கணித்துவருதல் -
- போதைப் பொருள்கள், நீலப்படம் போன்றவற்றைத் திட்டமிட்டு மாணவர்களிடையே விநியோகிப்பதன் மூலம் பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தல் -
- போக்குவரத்து வசதியின்மைகள், தடங்கல்களை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தல் -
- கல்லூரி அதிபர்களைக் கொலை செய்தல், மாணவர்களைக் கைதுசெய்தல் போன்றவற்றின் மூலம் பதற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்து கல்விச் செயற்பாடுகளை முடக்குதல் -
- பொருத்தமற்ற கல்விக் கொள்கைகள், நடைமுறைகள் காரணமாக மாணவர்கள் விரக்தியடையும் நிலைக்குத் தள்ளப்படுதல் -

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வாழ்க்கையும் கல்வியும் புனரமைக்கப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு எடுக்காததுடன் பொதுக்கட்டமைப்பையும் முடக்கிவைத்திருத்தல் -

- போதியளவு ஆசிரியர் நியமிக்கப்படாமை. 10 ஆயிரம் சிங்கள ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ள அதேவேளை 6ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.
- அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோர் உரிய முறையில் நியமனம் செய்யப்படாது கல்வி நிர்வாக நடவடிக்கைகளை பலவீனம் அடையச் செய்வதன் மூலம் தமிழர் கல்வியைப் பாழடித்தல் -

இந்நிலையில் தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுகூடி பின்வரும் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றோம்.

'பௌத்த சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் தமிழ் மக்களது கல்விச் செல்வத்தை மறுமலர்ச்சி அடையச் செய்து, தமிழர் தாயகத்தின சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் அதேவேளை, சர்வதேச அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையிலான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல தமிழ் மாணவர்களாகிய நாம் உறுதி பூணுகிறோம். தமிழ்த்தேசிய நோக்கிலான இயல்பானதும் சுதந்திரமானதுமான எமது கல்வியானது தன்னாட்சிகொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை அடைவதற்கு தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுதிரண்டு செயற்படுவோம் எனப் பிரகடனப்படுத்துகிறோம்''

மாணவர் சக்தி மாபெரும் சக்தி - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நெடுந்தீவுக் கரையில் பெண்ணின் சடலம் ஒதுங்கியது

யாழ்ப்பாணம்,நவ.12

நெடுந்தீவுக் கடற்கரையில் மிகவும் உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கியதாகத் தெரிவித்து பெண் ஒருவரின் சடலத்தை நெடுந்தீவுப் பொலீஸார் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலம் கரையொதுங்கிய செய்தி அறிந்த பொலீஸார் அதனை மீட்டெடுத்து பொலித்தீனில் பொதிசெய்து வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலம் அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-13-7)

## தொண்டைமானாறில் ஒதுங்கியது மன்னார் மீனவரின் சடலமா?

யாழ்ப்பாணம்,நவ.12

தொண்டைமானாறு கடற்கரையில் நேற்று முன்தினம் கரைஒதுங்கிய இளைஞரின் சடலம் மன்னார் மீனவருடையதா என்பதை உறுதிசெய்வதற்காக பிரஸ்தாப மீனவருடைய உறவினர்கள் இன்று யாழ். வருகின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜேக்கப் இத்தகவலைத் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட இந்தச்சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் அடையாளம் காணும்பொருட்டு வைக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் காணாமற்போனார் எனக் கூறப் படும் மீனவர் ஒருவரின் உறவினர்கள் இத்தகவலை அறிந்து பொலீஸாருடன் தொடர்புகொண்டுள்ளனர். குறிப்பிட்ட சடலம் மீனவருடையதா என்பதை அடையாளம் காண்பதற்காக அவர்கள் இன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர் என்று பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-13)

## ஆண்டிறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.12

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இதுதொடர்பாக நேர அட்டவணை வடமராட்சி கல்வி வலயத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் தோற்றுவோருக்கான முன்னோடிப் பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (ஐ-410)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இது புதிய முடிவு அல்ல பழைய நிலைப்பாடு தான்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஐந்து நாள்களே உள்ளன.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் - அதாவது தமிழர் தாயக மக்கள் - அக்கறையோ, கரிசனையோ காட்டத் தேவையில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட - மக்கள் பிரதிநிதிகளான - எம்.பிக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினருடன் நீண்டநேரம் ஆலோசனை நடத்திய பின்னர் இந்த முடிவை அறிவித்திருக்கின்றனர். கூட்டமைப்பின் சார்பில், அதன் நாடாளுமன்றக்குழுத் தலைவரான இரா. சம்பந்தன் இந்த முடிவை அறிவித்திருக்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று. தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்ட விடயமே அல்ல அது.

இலங்கையின் 1972ஆம் ஆண்டினதும் 1978ஆம் ஆண்டினதும் குடியரசு அரசமைப்புகளும் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையல்ல. அவையும் தமிழர்களின் பங்குபற்றுதலின்றி - அவர்களின் கோரிக்கைகள் கணக்கில் எடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டு - சிங்களத் தலைமைகளால், பெரும்பான்மை என்ற ஆதிக்கத்தின் மூலம் திணிக்கப்பட்டவை. அந்த அரசமைப்பை வைத்து, அதன் மூலம் தமிழர்களைக் கட்டுப்படுத்துவது ஒருவகையில் ஆதிக்க, அடக்குமுறை விவகாரம்தான். அந்த ஆதிக்கச் செயற்பாட்டின் உச்சப்பதவி நிலையில் இருப்பதுதான் - அதிகார வலிமை நிலையில் விளங்குவதுதான் - இந்த ஜனாதிபதிப் பதவி.

தமிழர் மீதான அடக்குமுறையின் உச்சப்படி நிலையில் இருக்கும் இப்பதவிக்கு ஒருவரைத் தெரிவுசெய்வதில் தமிழர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றுவது, அந்தத் தெரிவில் தமது பங்களிப்பை வழங்குவது, அந்தப் பதவி நிலையையே தமிழர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதாகிவிடாதா என்ற கேள்வி எழுகிறது. அதுவே தமிழர் தரப்பை இத் தேர்தலில் அக்கறைகாட்டத் தேவையில்லை என்ற நிலைக்குத் தள்ளியிருக்கின்றது என்பது தெளிவு.

இத்தகைய முடிவைத் தமிழர் தரப்பு இப்போதுதான் முதல் தடவையாக எடுத்திருக்கின்றது என்பது அல்ல. அதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்கள் 1982, 1988, 1994, 1999 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன.

1988 இல் இந்திய அமைதிப்படைகள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்தன.

1994இலும் 1999 இலும் தமிழர் தாயகத்தின்மீது கொடூர யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. தமிழர் தாயகத்தில் பெரும் பகுதி மக்களுக்கு வாக்களிக்கவே. சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஒட்டுமொத்தமாகத் தமிழர் தாயகம் இத்தகைய ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஒரு சீரான முடிவு எடுக்கும் அரசியல் அமைதி நிலைமையும் அக்காலங்களில் இருக்கவில்லை.

இப்போதைய யுத்தநிறுத்தம் போன்று ஓரளவு இயல்புநிலை - யுத்தக் கொடூரம் தணிந்த காலகட்டம் - 1982 ஜனாதிபதித் தேர்தலின்போதுதான் இருந்தது. தமிழர் தாயகமும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வாயிலாக ஒன்றுபட்டு இருப்பது போல, 1982இல் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்டமைப்பில் ஒன்றுபட்டிருந்தது. அப்போதும் தமிழர் தரப்பு இப்படிப்பட்ட ஒரு முடிவையே எடுத்தது என்பது நோக்கத்தக்கது.

சிங்களம் தனது தலைமையைத் தெரிவுசெய்யும் இந்தத் தேர்தலில் எமக்கு சிரத்தை எதுவுமேயில்லை என்றுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி 1982 ஜனாதிபதித் தேர்தலின் போது அறிவித்தது. அதையே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது. சிங்கள அடக்குமுறையைத் தமிழர்கள் மீது திணித்த ஆட்சி அதிகாரத்தின் உச்சப்படி நிலையில் யார் இருந்தாலும் - யார் வந்தாலும் - அது அடக்கு முறையாளரைத் தெரிவு செய்யும் ஒரு தேர்தல்தான். அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு எம்மை அடிமைப்படுத்தப்போகின்ற பிரகிருதி யார் என்பதை நாமே தெரிவுசெய்வது, எம்மை அடிமைப்படுத்துவதை நாமே அங்கீகரிப்பதாக அமையாதா?

1982 இல் ஜனாதிபதித் தேர்தலின் போது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆரின் செல்வாக்கு தென்னிலங்கையில் கொடிகட்டிப் பறந்தது. அத்தேர்தலில் யாரையும் ஆதரிப்பதில்லை என்ற முடிவை தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்ததன் மூலம் ஜே. ஆருக்கு எதிரான தமிழரின் எதிர்ப்புணர்வைத் தமிழர்கள் வெளிப்படுத்தவிடாமல் தமிழர் விடுதலைக் கூட்டணி தடுத்துவிட்டது என்று அப்போது குற்றம் சுமத்தப்பட்டது. இம்முடிவின் மூலம் - தமிழர் மீது பெரும் அடக்கு முறையைத் திணித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மீது தமிழருக்கு இருந்த எதிர்ப்பை அவரது எதிர்த்தரப்பு வேட்பாளரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹெக்டர் பொப்பேகடுவவுக்கு வாக்களிப்பதன் மூலம் காட்டுவதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தடுத்ததன் மூலம் - இரண்டாம் சுற்று வாக்குக் கணக்கெடுப்பின்றியே ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெற்றி பெறுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி வழிசமைத்துக் கொடுத்தது என அப்போது கூட்டணி மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அதேபோன்ற சூழ்நிலையில்தான் இன்றும் சிங்களப் பேரினவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து தமிழரை அடிமைப்படுத்தும் மேலாண்மைவாதத்தின் வடிவமாக நிற்கின்றார் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அவருக்கு நல்ல பாடம் ஒன்றை - தமிழரின் முழு எதிர்ப்பை - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்குகளை அள்ளி வழங்குவதன் மூலம் காட்டுவதற்குக் கிடைத்த வாய்ப்புத் தடுக்கப்படுகின்றது என்ற முணுமுணுப்பு இங்கு கிளம்பாமல் இல்லை.

தனி மனித ஆதரவு அல்லது எதிர்ப்பு என்பதற்கு அப்பால் - அதுவும் நம்மை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தும் பேரினவாதப் பக்கத்தில் தனி ஒருவரை ஆதரித்தல் அல்லது எதிர்த்தல் என்பதற்கு அப்பால் - நமது இனத்தின் ஒன்றுபட்ட கொள்கை நிலைப்பாட்டைத் தடம்புரளாமல் வெளிப்படுத்துவது தானே முக்கியம்? அதை உணர்ந்துகொண்டால் - புரிந்துகொண்டால் - இந்த முணுமுணுப்புகளும் அடங்கிவிடும்.

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வாக்கு நிலையங்கள் சில கொத்தணி முறையில்

வலி.வடக்கு,நவ.12

யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் சில கொத்தணி நடைமுறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் வாக்காளரின் நன்மைகருதி கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச கட்டடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

அண்மைக்காலமாகப் படையினர் மற்றும் பொலீஸார் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களைத் தொடர்ந்து பாதுகாப்பு நிலைமைகளையும் கருத்திற்கொண்டு வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு கொத்தணி முறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே வாக்காளர் அட்டைகள் வாக்களிப்பு நிலையங்களின் பெயர்கள் குறிப்பிட்டு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தால் பாட சாலைகள், அரச திணைக்கள கட்டடங்களைத் தேர்தல் பணிக்காகக் கையேற்பது சம்பந்தமான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் உரியவாக்களிப்பு நிலையங்களின் விவரங்கள் கொத்தணி அடிப்படையில் குறைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது. (ஓ-86)

# நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்றோர் தேர்தல் கடமையில் ஈடுபடுவது அவசியம்

## யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் அறிவுறுத்து

குருநகர், நவ.12

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் தேர்தல் கடமைக்காக யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தினால் நியமனக் கடிதம் அனுப்பிவைக்கப்படவுள்ள அனைத்து அரச ஊழியர்களையும் தேர்தல் கடமைக்குத் தவறாது சமுகமளிக்க அறிவுறுத்துமாறு யாழ். அரச அதிபரும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருமான க.கணேஸ் யாழ்ப்பாணத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல் அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் 85 வீத மானவர்களும் - வாக்கெடுப்பு நிலைய எழுதுநருக்கான பயிற்சி வகுப்புகளில் 65 வீதமானவர்களும் மட்டுமே கலந்துகொண்டுள்ளார்கள்.

அழைக்கப்பட்டு வருகை தரத்தவறியவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே, பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளத் தவறியவர்களுக்கும் தேர்தல் கடமை புரிவதற்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும். சம்பந்தப்பட்டோர் தவறாது தேர்தல் கடமைக்குச் செல்லவேண்டும் - என்று அரச அதிபர் அனுப்பிவைத்துள்ள அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-51)

# அஞ்சல்வாக்காளருக்கு மீண்டும் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், நவ.12

தபால் மூல வாக்காளருக்கு வாக்களிக்க மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருமான கே. கணேஷ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இந்த இரு தினங்களிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் வாக்களிக்கத் தவறியவர்கள் ஜனாதிபதித் தேர்தல் தினமான 17ஆம் திகதி மாலை 4 மணிவரையும் தமக்கு ஒதுக்கப்பட்ட திணைக்களங்களின் தபால்மூலமான வாக்களிப்பை மேற்கொள்ளமுடியும் - என்று அரச அதிபர் மேலும் கூறினார்.

(எ-204-202)

# காரைநகரில் கால்நடைகளால் பயிர்கள் அழிவு

காரைநகர், நவ.12

காரைநகரில் விவசாய நிலப்பரப்பைச் சுற்றி விவசாய சம்மேளனங்கள் முன்னர் அமைத்த வேலிகள் இம்முறை செப்பனிடப்படாமையால் கட்டாக் காலி கால்நடைகளால் நெற்பயிர்ச்செய்கை அழியும் அபாயம் தோன்றியுள்ளது.

கால்நடை வளர்ப்போர் பின்னிரவு வேளைகளில் மேய்ச்சலுக்காகத் தாம் வளர்க்கும் கால்நடைகளை அவிழ்த்து விடுகின்றனர். அவை வயல்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன.

இதுகுறித்து உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-73)

# தபால் விநியோகத்தை விரைவுபடுத்த ஊழியருக்கு விரைவில் மோ.சைக்கிள்கள்

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ். மாவட்டத்தில் தபால் விநியோகத்தை விரைவுபடுத்தும் வகையில் தபால் விநியோகம் செய்பவர்களுக்கு மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். தபால் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

சைக்கிள்களில் சென்று தபால் விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது. கிடைக்கப்பெறும் அனைத்துத் தபால்களையும் அன்றையதினமே விநியோகிப்பதில் சிரமம் எதிர்கொள்ளப்படுகின்றது.

எனவே, இந்தச் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டு தபால் விநியோகம் செய்பவர்களுக்கு மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்படும். இதனால், தபால் ஊழியர்கள் விரைவாகத் தமது பகுதிகளுக்குரிய தபால்களை விநியோகம் செய்யக்கூடியதாக இருக்கும்.

மேற்படி, மோட்டார்சைக்கிள்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது - என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (எ-14)

# நெல்லியடிச் சந்தையில் மழைநேரம் அவலம்

யாழ்ப்பாணம், நவ.12

நெல்லியடி மத்திய சந்தையில் கொட்டகைகள் சீரமைக்கப்படாமையால் மழைகாலத்தில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை மொத்தமாக விற்பனை செய்யும் விற்பனை நிலையமாக நெல்லியடி மத்திய சந்தை உள்ளது. இங்கு பொருள்களை வைத்து விற்பனை செய்வற்கென தனியான கொட்டகைகள் எதுவும் அமைக்கப்படாமையால் கொட்டும் மழைக்கு மத்தியில் விவசாயிகள் தமது பொருள்களை விற்பனை செய்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது. கரவெட்டிப் பிரதேச சபை அமைத்த கொட்டகைகள் தற்போது பெய்துவரும் மழைக்கு ஒழுக ஆரம்பித்துள்ளன. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஓ-410)

# உரவகைகளின் விலைகளை தமிழீழ நிதித்துறை அறிவித்தது

யாழ்ப்பாணம்,நவ.12

'ஹேலீஸ்' நிறுவனத்தின் உரங்களை யாழ். மற்றும் வன்னிப் பகுதியில் விற்பனை செய்யக்கூடிய ஆகக்கூடிய விலையைத் தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி நடுவப் பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ள உர விலைகள் வருமாறு:-

50 கிலோகிராம் நிறையுடைய யூரியாவின் வன்னி விற்பனை விலை 656 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை 677 ரூபாவும் ஆகும்.

50 கிலோகிராம் நிறையுடைய அமோனியாவின் வன்னி விற்பனை விலை ஆயிரத்து 391 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 412 ரூபாவும் ஆகும்.

50 கிலோகிராம் நிறையுடைய வி. 01 இன் வன்னி விற்பனை விலை ஆயிரத்து 638 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 659 ரூபாவும் ஆகும்.

50 கிலோகிராம் நிறையுடைய ரீ. எஸ்.பியின் வன்னி விற்பனை விலை ஆயிரத்து 824 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 845 ரூபாவும் ஆகும்.

50 கிலோகிராம் நிறையுடைய ரீ.டி. எம்மின் வன்னி விற்பனை விலை ஆயிரத்து 160 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 181 ரூபாவும் ஆகும்.

50 கிலோகிராம் நிறையுடைய எம். ஓ.பியின் வன்னி விற்பனை விலை ஆயிரத்து 772 ரூபாவும் யாழ். மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 793 ரூபாவும் ஆகும். (ஓ-202)

## நாளை

ஐப்பசி 27
ஞாயிற்றுக்கிழமை
13.11.2005
திதி: துவாதசி
முற்பகல் 10.25 வரை
நட்சத்திரம்: ரேவதி
பின்னிரவு 02.23 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 09.07 - 10.37
ராகுகாலம்: 04.37 - 06.07
(யாவும் பழைய நேரப்படி)

# ஊடகங்கள் மீதான தாக்குதல்: ஆவணப்படுத்த புதிய இணையத்தளம்

கொழும்பு, நவ. 12

பத்திரிகைச் சுதந்திரத்துக்கும், பேச்சுக் கருத்துச் சுதந்திரத்துக்கும் எதிராக இலங்கையில் கட்டவிழ்த்து விடப்படும் தாக்குதல் சம்பவங்களை ஆவணப்படுத்தி வெளியிடும் இணையத்தளம் ஒன்றைச் சர்வதேச இதழியலாளர்கள் சம்மேளனம், சர்வதேச பேச்சுச் சுதந்திரப் பரிமாற்ற நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சுதந்திர ஊடக இயக்கம் ஆரம்பித்துள்ளது. www. freemedia sri lanka.org என்பதே அந்த இணையத் தளமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் மும் முரமாக நடைபெறும் இன்றைய நாள்களில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும், தாக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இந்தத் தாக்குதல் சம்பவங்கள் உட்படப் பத்துவகை இதழியலுடன் தொடர்புடைய பத்திரிகையாளர் பயன்பெறக்கூடியதுமான, இதழியல் தொடர்பான விவரங்களும் இந்த இணையத் தளத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் 'சுடரொளி' பத்திரிகைக் காரியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் உட்பட அண்மையில் இலங்கையில் நடந்த ஊடகவியலாளருக்கு எதிரான பல தாக்குதல் சம்பங்களும் இந்த இணைத் தளத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## உதவாக்கு

நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் எதிர்காலத்தில் நன்மை பயக்கக் கூடியனவாக இருக்கவேண்டும்.

– ஓர் அறிஞர்.

**ஹோட்டலுக்கு வேலையாள்கள் தேவை**

1. சப்ளையர்ஸ்
2. டீ மேக்கர்
3. பார்சல் கட்டுபவர்
4. சமையல் உதவியாளர்

உடன் தொடர்பு:-

**திரீ ஸ்டார் ஹோட்டல்**

இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222-7125

(சி-46190) (26.16.46)



## புதுக்கடைத் திறப்பு விழா

*13.11.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 முதல் 11.30 வரை உள்ள சுபவேளையில்*

# நிரோஜன் சைவ உணவகம்


*திறக்கப்படவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

குறிப்பு: 392, கே.கே.எஸ் வீதியில் இயங்கிவந்த ஸ்தாபனம் தற்போது 486, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுகிறது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்:
**J.விக்டர் இம்மனுவேல்**
**(சிறி)**

(42699)(25.16.46)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 - 10 - 1955

இறப்பு 23 - 11 - 2004

### அமரர் நடேசர் ராஜா

திதி: 12.11.2005

அகவை ஐம்பது காணும் முன்னே
ஆண்டவன் அழைத்தது ஏன் தானோ?
இவ்வுலகில் வாழ்ந்ததுபோதுமென
ஈசனிடம் நீர் சென்றதேனோ?
உள்ளம் ஏங்கித் தவிக்கையில்
ஊரும் இங்கே தவிக்குதையா
எம்மை விட்டு ஏன் சென்றீர்
ஏற்றுக்கொள்ள முடியவில்லை
ஐயம் கொண்டே வாழ்கிறோம்
ஓராண்டு சென்றாலும்
ஓராயிரம் ஆண்டு ஆனாலும்
உம்மை என்றும் மறவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

740, நாவலர் றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். (42690)(26-16-16) - குடும்பத்தினர்.

## வடமராட்சி கிழக்கு - புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

**மணல் விநியோக அறிவித்தல்**

10-11-2005 வியாழக்கிழமை திகதி குறிப்பிடப்பட்டவர்களுக்குரிய மணல் விநியோகம் இன்று (12-11-2005) சனிக் கிழமை நடைபெறும். எதிர்வரும் 14-11-2005 திங்கட்கிழமை மழை இல்லா தவிடத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் திங்கள் குறிப்பிடப்பட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு மணல் விநியோகிக்கப்படும்.

உபயகதிர்காமம்
புலோலி. (சி-46189)(25.16.46) நிர்வாகம்-

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ.இல :-379/05,
தன்மை :-பணம்,
பெறுமதி :-23,50,485/-

வழக்காளி,
இராஜேந்திரம் விஜயராஜ்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

எதிராளி,
பாஸ்கரன் இராஜகுமார்,
உடையார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

எதிராளியின் பிணை நபர்கள்,
1) தம்பு பாஸ்கரன், 2) பாஸ்கரன் நந்தகுமார்
இருவரும்,
உடையார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கில் எதிராளியான பாஸ்கரன் இராஜகுமார் எனும் எதிராளிக்கு அழைப்பானை சேர்ப்பித்ததன் பேரில் இம் மன்றில் தோன்றி (21,34,520) இருபத்தியொரு லட்சத்து முப்பத்து நாலாயிரத்து ஐநூற்று இருபது ரூபா பணம் வழக்காளிக்கு கொடுக்குமதி என்பதை ஏற்று மிகுதிப் பணம் தொடர்பில் மறுமொழி அணைக்கத் தவணை கோரியதுடன் தனக்காக ட.தம்பு பாஸ்கரன் பாஸ்கரன் நந்தகுமார் இருவரும் உடையார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை எனும் நபர்களின் ஆதனங்களைப் பிணைப்பொறுப்பாக வைத்தும் உள்ளார், தற்போது மன்றில் தவணைகளுக்குச் சமூகமளிக்காது எதிராளி தலைமறைவாகத் திரிவதுடன் மேற்படி பிணை நபர்களுக்கு இம்மன்றால் அழைப்பானை அனுப்பப்பட்டுள்ள நிலையில் அவர்களும் மன்றிற்கு சமூகமளிக்காத காரணத்தால் இப் பிணை நபர்களால் மன்றில் பிணையாக வைக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் ஆதன டாப்புகளில் விவரிக்கப்படும் ஆதனங்களை விற்பனை செய்வதோ வேறு எவ்வகையிலும் எந்த ஒரு தேவையின் பொருட்டும் கைமாற்றம் செய்வது அல்லது செய்ய முனைவது அல்லது பொறுப்பாகக் கொடுப்பது போன்றவை யாவும் தடை செய்யப்படுவதுடன் அவ்வாறான நடவடிக்கைகள் யாவும் செல்லுபடியற்றவையாகக் கருதப்படும் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தரப்படுகிறது. இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 14 நாள்களுள் எதிராளியோ, பிணைநபர்களோ, அல்லது இக்கறையுடைய எவருமோ, உரித்தாளர்களோ, மன்றில் தோன்றி ஆட்சேபனையைத் தெரிவிக்கத்தவறும் பட்சத்தில் இவ்வாதனங்கள் தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

#### ஆதன டாப்பு - 01

**உறுதி இல - 3871/27,02,2001 (உத்தனாயன் மணல்)**

வடமாகாணம் யாழ்.மாவட்டம் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை, கோயிற்பற்று தும்பளையிறை, உத்தனாயன் மணல் நிலப்பரப்பு 38¼ இதில் தெற்குப் புறமாக எட்டில் மூன்று பங்குக்கு நிலப்பரப்பு 9 குளி 9½ இதில் மேற்குப்புறமாக நிலப்பரப்பு 5 குளி 9 ½ இதற்கு நில அளவையாளர் க.ம.கந்தப்புவால் 1974 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 101ஆம் இலக்க படத்தின் படி நிலப்பரப்பு 5 குளி 4,5 இது மூன்று துண்டுகளாகப் பிரிவிடப்பட்டுள்ளது. இதில் 3 ஆம் இலக்க துண்டுக்கு 2001 ஆம் ஆண்டு மாசி மாதம் 19 ஆம் திகதி நில அளவையாளர் செ.கந்தசாமியால் அளந்து விந்தாரிக்கப்பட்ட 65 ஆம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு (2குளி 8.61) 2 குளி எட்டுத் தசம் ஆறு ஒன்று இதற்கு எல்லை கிழக்கு செல்வராசா பெண் விஜயராணிக்குரியாதனம், வடக்கு வடிவேலு கைம்பெண் இலட்சுமி பிள்ளைக்கும் மறுபேருக்கு முரியாதனம், மேற்கு வல்லிபுரம் விஜயரத்தினத்துக்கும் மறுபேருக்கு முரியாதனம், தெற்கு உடையார் ஒழுங்கை இவ் எல்லைக்குட்பட்ட நிலம், வீடு, கிணறு, மலசலகூடம் மற்றும் அடங்கலும்.

#### ஆதன டாப்பு - 02

**உறுதி இல - 3592 / 07.04.2004 (உத்தனாயன் மணல்)**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி, பருத்தித்துறைக் கோயிற்பற்று, தும்பளை இறை-''உத்தனாயன் மணல்'' நிபர 38 1/8 இதில் தெற்குப் புறமாக மூன்றிலிரண்டு பங்கில், வடக்குப் புறமாக எட்டில் மூன்று பங்குக்கான நிபர 9 குளி 9 ½ இதில் கிழக்குப் புறமாக நிபர 02 நீக்கி அதற்கடுத்த கிழக்குப் புறமாக நிபர (02) இரண்டு, இதற்கு எல்லை கிழக்கு செல்லர் கைம்பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம், வடக்கு சபாபதிப்பிள்ளை மகள் இலட்சுமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு வேலன் ஆழ்வானின் உரிமைக்காரருக்குடைய ஆதனம் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

#### ஆதன டாப்பு - 03

**உறுதி இல-11708/30.09.1989 (துரும்பன் தாழ்வு)**

வடமாகாணம், யாழ்.மாவட்டம், வடமராட்சிப்பகுதி, உடுப்பிட்டி கோயிற்பற்று, வல்வெட்டித்துறை இறை துரும்பன் தாழ்வு 1/6 இற்கு நிலப்பரப்பு 7¼ இதில் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலம் நிப.¼ நீக்கி பாதியில் மேற்கரை வாசிக்கு நி.ப.3½இதில் வடக்குப்புறமாக நிந்தமான குளி 9½ எல்லை கிழக்கு கதிரிப் பிள்ளை பெண் மாணிக்கத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கதிரிப் பிள்ளை சிவப்பிரகாசத்தின் உரிமைக்காரருக்குடைய வாதனம், தெற்கு சிற்றம்பலம் சுப்பிரமணியத்திற்குரிய ஆதனம் இதனடக்கலும் இதனோடு சேர்ந்த அனைத்தும்.

#### ஆதன டாப்பு - 04

**உறுதி இல-4923/30.06.1999 (திகரி)**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி, பருத்தித்துறை கோயிற்பற்று தும்பளையிறை திகரி நிபர 5 ¾ இதிலாட்சிப்படி நாலில் ஒரு பங்குக்கு நிபர 1 குளி 77/8 எல்லை கிழக்கு சின்னக்குட்டி பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு பாலா ஆழ்வாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வல்லிபுரம் இளைய தம்பிக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், சேதமடைந்த கல்வீடு மற்றுமடங்கலும்.

#### ஆதன டாப்பு - 04 'அ'

**உறுதி இல-3589/05.04.2004 (யாரை)**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி,பருத்தித்துறை கோயிற்பற்று தும்பளை இறை ''யாரை'' நிபர 3½ ஆட்சியிலுள்ள நிபர 4 குளி 07 இதற்கு 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதி நில அளவையாளர் சி.வாபதேவன் அவர்களால் 75ஆம் இலக்கத்தில் அளந்து விந்தரிக்கப்பட்ட படத்தின்படி நிபர 4 குளி 16:27, குறித்த 75ஆம் இலக்கப் படத்தில் 5ஆம் இலக்கத்துண்டுக்கு நிபர 1 குளி 08, 25 எல்லை கிழக்கு குறித்த 75ஆம் இலக்கப் படத்தில் கண்ட 4ஆம் நம்பர் துண்டு வடக்கு குறித்த 75ஆம் இலக்கப்படத்தில் கண்ட 4ஆம், 6ஆம் நம்பர்த் துண்டுகள் மேற்கு சின்னையா வேலுப்பிள்ளை பெண் பொன்னம்மாவுக்குடைய ஆதனம், தெற்கு சின்னையா வேலுப்பிள்ளை பெண் பொன்னம்மாவுக்குடைய ஆதனமும் கிட்டினன் செல்லையா கைம்பெண் தெய்வானையின் உரிமைக்காரருக்குடைய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலும்.

#### ஆதன டாப்பு - 04, 'ஆ'

**உறுதி இல - 3589/05.04.2004 (யாரை)**

குறித்த 75ஆம் இலக்கப் படத்தில் 4ஆம் இலக்கத்துண்டுக்கு நிபர 1குளி 08, 25, இதில் தெற்குப் புறமாக குளி 7 (ஏழு) எல்லை கிழக்கு தவேந்திரன் பெண் பாக்கியத்தின் ஆதனம் வடக்கு இதன் மிகுதி ஆதனம் மேற்கு குறித்த படத்தில் 5ஆம் இலக்கத்துண்டு தெற்கு கிட்டினன் செல்லையா கைம்பெண் தெய்வானையின் ஆதனம், இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் மற்றுமடங்கல் யாவும்.

''மன்றின் கட்டளைப்படி''

வரைவு:
ரி.எஸ்.வேலவர்
வழக்காளியின் சட்டத்தரணி,
வேல்ட் விசன் ஒழுங்கை,
நீதிமன்று முன்பாக, கண்டி வீதி, கிளிநொச்சி. (42658)(26-19-16)

செ.மாணிக்கராசா,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




திரு.திருமதி ஜீவராஜ் – நிமலவேணி தம்பதியரின் செல்வப் புதல்வி **செல்வி துஸாறா**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று சனிக்கிழமை (12.11.2005) பி.ப4.00 மணிக்கு ஸ்ரீ பாம் வீச் ரெஸ்ரோரன்டில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, சித்தி, மாமா ஆகியோர் இவரை பல்கலையும் கற்று சீரும் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

அன்றையதினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும் திரு.திருமதி க.ஜீவராஜ் (ஜீவா) பவிதா

T.P.:0777283595

ஸ்ரீபாம் வீச் றெஸ்ரோரன்ட்,
ராஜா தியேட்டர் கொம்பிளக்ஸ்,
205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:- மாமா(கம்சன்)



(42687)

# நிபுணர்கள் வகுத்த திட்டத்தின் பிரகாரமே மண் அகழ்வை அனுமதிக்க வேண்டும்

## தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் வலியுறுத்து

கிளிநொச்சி,நவ.12

தமிழர் தாயகப் பிரதேசத்தில் மணல் அகழ்வு குறித்து சமூக, பொருளாதார, சூழல் துறைசார் நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம் அவசியம் - இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம்.

இது தொடர்பாக ஆணையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயகப் பிரதேசத்தில் கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமையால் மண் அகழ்வு நடவடிக்கையும் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒரு சில அடிகள் ஆழத்தில் காணப்படும் மேற்படை மண்ணே தாவர வளர்ச்சிக்கும் அதனுடன் தொடர்பாக உள்ள விலங்கினங்களுக்கும், நுண்ணுயிர்களுக்கும் உகந்தது.

மண் அகழ்வினால் இம்மேடை அகற்றப்பட்டால் அங்குள்ள உயிரினங்கள் அழிந்து போகின்றன. தாவரங்களின் வேர்கள் மண்ணைக் கவ்விப்பிடிக்க இல்லாததால் மழை நீர் மண் அரிப்பை துரிதமாக்கும். அதனால் நிலக்கீழ் நீர் மேடையை நோக்கி நீர் செல்வது குறையும். ஆறுகளிலும் குளங்களிலும் வேகமாக வண்டல் படிதல் நடைபெறும். ஆகவே, இவற்றின் நீர்க் கொள்ளளவு குறையும். தாவரப் பாகங்கள் அடைவதால் ஆறுகளின் நெழிவுப் பாதையில் பெரிய மாற்றங்கள் ஏற்படும். திடீர் வெள்ள சாத்தியக் கூறு அதிகரிக்கும். கடற்கரைகளில் மண் அகழ்வு ஓர் நாட்டுக்குள் கடல் நீர் வருவதற்கு வழிகோலும். சில இடங்களில் புதை பொருள்கள் (தொல் பொருள்கள்) கலாசாரத்தை எடுத்துக்காட்டும் பாரம்பரியங்கள் இருப்பதால் அவை பாதிக்கப்படும். இவை சமுதாயத்திற்குப் பெரிய இழப்பாகும்.



இத்தகைய மாற்றங்கள் தனித்தனியே நடப்பவை அல்ல. இவற்றின் ஒன்று திரண்ட விளைவுகள் சமூக, பொருளாதார அனர்த்தங்களை ஏற்படுத்தும்.

தமிழர் தாயகத்தின் பல இடங்களில் மண் அகழ்வால் அளப்பரிய இடையூறுகள் உண்டாக்கியுள்ளன. இவற்றை நாம் எல்லோரும் தீவிரமாக சிந்தித்து மண் அகழ்வால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை மட்டுப்படுத்தவும் மண் அகழ்வை பேணத்தகு நிலையில் நடத்தவும், சூழல் நல்லாட்சி ஆணையத்துடன் ஒத்துழைக்க வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை - தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் வவுனியா மாவட்டத்தில் முதற்கட்ட ஆய்வு வேலைகளை மேற்கொண்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மணல் அகழ்வு செய்யும் ஆறுகளையும், கிரவல் மண் தோண்டி எடுக்கும் இடங்களையும், மத்திய சுற்றாடல் சூழல் பாதுகாப்பு சபை அதிகாரி தி.திருக்குமரன் தலைமையிலான குழுவில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த சந்திரகாந்தன் மற்றும் அதிகாரிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த முரளி மற்றும் அதிகாரிகள் வவுனியா வடக்கு பிரதேச சபையைச் சேர்ந்த அகஸ்டீன் மற்றும் அதிகாரிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை மற்றும் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகத்தை சேர்ந்தவர்களும் ஆய்வு வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டனர். (ஒ-352-202)

## நடமாடும் பதிவு சேவை

புளியங்குளம், நவ.12

வவுனியா பிரதேசத்தின் பாலமோட்டை, மாதர் பணிக்க மகிழங்குளம் ஆகிய இடங்களில் நடமாடும் பதிவு சேவை கடந்த 3 ஆம் திகதி நடத்தப்பட்டது.

பாலமோட்டை அ.த.க.பாடசாலை, கோயில்குஞ்சுக்குளம் பலநோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான பதிவு, காணிப்பதிவு, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு என்பன இடம்பெற்றன.

(ஒ-355-202)

## சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடு

கிளிநொச்சி,நவ.12

தமிழீழ சுகாதார சேவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் கிளிநொச்சி பிரதேச சபை ஆகியவை இணைந்து கிளிநொச்சி நகர்ப்பகுதியில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளைக் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டன.

நகர்ப்பகுதியிலுள்ள உணவகங்கள், தங்கும் விடுதிகள், குளிர்பான நிலையங்கள் என்பவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் அடிப்படைச் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்ட நிலையங்களின் உணவகச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு அவை தேநீரகங்களாக மட்டும் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. (ஒ-202)

## பனைசார் உற்பத்திப் பொருள்கள் பாவனையை ஊக்குவிக்கப் போட்டி

பரந்தன்,நவ.12

பொலித்தீன் பாவனைக்கு மாற்றாக பனைசார் உற்பத்திகளின் பாவனையை ஊக்குவிப்பதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போட்டியொன்றை அடுத்த மாதம் நடத்தவுள்ளது.

கடந்த 5ஆம் திகதி பொருண்மிய நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பனைசார் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்காகவும் இக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

திட்டமிடல் ஆலோசகர் சி.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், தமிழர் தாயகத்தின் வடபகுதியில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர்கள், போதனாசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பனைசார் கைப்பணிப்பொருள்கள், உற்பத்திப் பொருள்கள் என்பவற்றிற்கான சந்தைவாய்ப்பைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-352-202)

# காலம் தவறிய பருவ மழையால் மானாவாரி நெற்செய்கை பாதிப்பு

பூநகரி,நவ.12

பூநகரிப் பிரதேசத்தில் காலம் தவறிய பருவ மழையால் நெற்செய்கை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பூநகரி பிரதேசத்தில் மானாவாரி நெற்செய்கை வழக்கமாக அதிகளவில் மேற்கொள்ளப்படும். இவ்வாண்டு பருவமழை மானாவாரி நெற்செய்கைக்கு உகந்ததாக அமையவில்லை.

அதனால், பூநகரிப் பிரதேசத்தில் குறிப்பாக செட்டியகுறிச்சி, செல்லையா தீவு, கறுக்காய் தீவு, ஞானிமடம், சித்தங்குறிச்சி ஆகிய பகுதிகளில் மானாவாரி நெற்செய்கை பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.(ஒ-403)

# பறவை வேட்டை முற்றாகத் தடை; மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

பரந்தன்,நவ.12

ஆனையிறவு சுண்டிக்குளம் கடல் ஏரிகளிலும் பறவைகள் சரணாலயங்களிலும் பறவைகளை வேட்டை யாடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பறவைகளை வேட்டையாடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் உள்ளூர் பறவையினங்கள் அருகிவருகின்றன. அத்துடன் வெளிநாட்டிலிருந்து இடம் பெயர்ந்துவரும் பறவைகளும் குறைந்து போகின்றன.

பறவைகளை வேட்டையாடும் போது ஏற்படும் வெடிச் சத்தம் காரணமாகப் பல பறவைகள் இடம்பெயர்ந்து போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே பறவைகள் வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரும்பொருள் காப்பு நடுவகத்தினர் எச்சரித்துள்ளனர்.

(ஒ-352-202)




# பாடசாலை வகுப்பறைகள் பொதுநோக்கு மண்டபத்தில்!

புளியங்குளம்,நவ.12

வவுனியா, பெரியமடு அ.த.க.பாடசாலைக் கொட்டகைகள் வேயப்படாமையால் மழைகாலத்தில் மாணவர்களின் கல்வி பெரும்பாதிப்படைகின்றது.

தொடர்ந்து பெய்துவரும் மழையால் பாடசாலைக் கொட்டகைகளில் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது.


இதனால் இப்பாடசாலையின் வகுப்புகள் பெரியமடு பொது நோக்கு மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. தற்போது அந்த மண்டபத்தில்தான் வகுப்புகள் நடைபெறுகின்றன.

பாடசாலைக் கூரையை வேய்ந்து தரும்படி சம்பந்தப்பட்ட பலரிடம் கோரிக்கை விடுத்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென பாடசாலைச் சமூகத்தினர் அதிருப்தி தெரிவிக்கின்றனர். இதேவேளை - மேற்படி பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம், மலசலகூடம், கிணறு போன்ற அடிப்படை வசதிகள் எவையும் இல்லையெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (த-355)

*கிளிநொச்சியில் கடந்த 3 ஆம் 4ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட த் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் மாநாடு இடம்பெற்றது. அப்போது இடம்பெற்ற கலாசாரப் பேரணி மற்றும் மாநாடு ஆகியவற்றின் சில காட்சிகள் இவை. (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*







# ஜனாதிபதித் தேர்தலில் நாம்வாக்களிப்பது மாவீரர்களின் தியாகத்துக்கு இழுக்காகும்

## நயினாதீவு ச.ச. நிலையங்களின் சமாசம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.10

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாம் வாக்களிப்பது மாவீரர்களின் தியாகத்துக்கு இழுக்காகும்.

நயினாதீவு சனசமூக நிலையங்களின் சமாசம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தனது தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் சர்வதிகாரம் படைத்த ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலை எதிர்வரும் 17ஆம் திகதி சந்திக்கின்றது ஸ்ரீலங்கா. இந்தத் தேர்தலினால் மட்டுமல்ல ஸ்ரீலங்காவின் எந்தத் தேர்தலினாலும் ஈழத்தமிழர்களாகிய எமக்கு கிடைத்த, கிடைக்கப்போகும் பயன் என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான மஹிந்தவும் ரணிலும் யார்?

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் விஞ்சி நிற்பது நானா? நீயா? எனப் போட்டி போட்டுக்கொண்டு தேர்தல் களத்தில் வலம் வரும் இவர்களை நாம் இனங்கண்டு கொண்டுள்ளோம்.எமது உரிமைகளைக் கொடுக்க மறுத்து தனது உள்ளூர் பேரினவாதக் கூட்டாளிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளுடன் துணை சேர்ந்து எமக்கெதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிக்க முற்படுகிறார் மஹிந்த ராஜபக்ஷ.

ரணிலோ, சந்திரிகா அம்மையாரையும் கூட்டுச் சேர்த்து சர்வதேச உதவியுடன் ஓர் அரைகுறைத் தீர்வினைத் தமிழர்களின் தலையிலே சுமத்த நினைக்கிறார். முடியாவிடில் அமெரிக்க, பிரிட்டன், இந்திய வல்லாதிக்க சக்திகளின் உதவியுடன் எமது போராட்ட வலுவினை அழித்தொழிக்கலாம் எனக் கனவு காண்கிறார்.

நாம் சோறு வேண்டாம் சுதந்திரம் வேண்டும் என்றோம். உயிர் வேண்டாம் உரிமை வேண்டும் என்று களமாடினோம். இந்த ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் ஈழத் தமிழர்களாகிய நாம் வாக்களிப்பது ''எமது விடுதலைக்கான புனித சுதந்திர வேள்வியிலே ஆகுதியாகி வித்துக்களாய் புதைந்த எமது நிழல் தரும் விருட்சங்களாகி நிற்கும் மாவீரர்களின் மபெரும் தியாகத்திற்கு இழுக் கானது'' மானமுள்ள தமிழன் எவனும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கமாட்டான் என்பது திண்ணம்.

தமிழ் மக்களாகிய நாம் இத்தேர்தலை முற்றாக நிராகரிப்பதன் மூலம் எமது தேசியத்தையும், எமக்கு ஒரு தனிநாடு உண்டென்பதையும் எமக்கென்றொரு தேசியத் தலைமை உண்டு என்பதையும் சிங்கள - பௌத்தப் பேரினவாதத்துக்கும் சர்வதேசத்துக்கும் உறுதிபட எடுத்துரைப்போம் - என்றுள்ளது. (ஒ)

### மஹிந்த - ரணில் பகிரங்க விவாதத்தை ரூபாவாஹினி ஒளிபரப்ப விரும்பம்

கொழும்பு, நவ.12

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையேயான உத்தேச பகிரங்க விவாதத்தை நேரடியாக ஒளிபரப்புச் செய்வதற்கு ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.எம்.சுஹைர் இரு வேட்பாளர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கின்றார்.

### மின்சாரம் தாக்கி இளைஞர் காயம்

ஆலயமொன்றில் திருத்தப்பணியில் ஈடுபட்ட இளைஞர் மின்தாக்கிப் படுகாயமடைந்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அராலியைச் சேர்ந்த என்.சிவஞானம் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவர் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (ஒ-12)

# நிந்தவூரில் 300 ஆசிரியர்களின் தபால் வாக்களிப்பு பதிவாகவில்லை

கொழும்பு, நவ.12

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடெங்கும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நடந்த போதிலும், கல்முனை நிந்தவூர் பகுதியில் அரச ஊழியர்களான 300இற்கும் கூடுதலான ஆசிரியர்கள் தமது தபால் மூல வாக்குகளைச் செலுத்த முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான பவ்ரல் அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்களிப்புப் பற்றிய தனது கண்காணிப்பு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கடந்த காலத் தேர்தல்களின்போது நிந்தவூரில் தபால் மூல வக்களிப்புக்கு என த்னி வாக்களிப்பு நிலையம் நிறுவப்பட்டது. ஆனால், தபால் மூல வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்ட ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்தி குறைக்குமாறு தேர்தல் ஆணையாளர் சுற்றறிக்கை மூலம் கேட்டுக்கொண்டிருந்தார்.

இதனால், அதற்கமைவாக கல்விசார் துறைகளைச் சேர்ந்தோருக்கான தபால் மூல வாக்களிப்பு நிலையத்தை கல்வி வலய அலுவலகத்தில் நிறுவ வேண்டியதாயிற்று. இதனால், இந்த ஆசிரியர்கள், நிந்தவூரிலிருந்து சுமார் 15 - 20 கிலோமீற்றர் தூரம் சென்று தமது தபால் மூல வாக்குகளை ஒப்படைக்க வேண்டிய கஷ்டத்துக்கு ஆளானார்கள் என்று இவர்களின் இந்த அவலம் குறித்து அம்பாறை மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருப்பதாக பவ்ரல் தனது கண்காணிப்பு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

# நேரடி விவாதத்துக்கு மஹிந்த - ரணில் தயார்!

## ஏற்பாடுகளுக்கு இருதரப்பிலும் பிரதிநிதிகள் நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடி விவாதத்திற்கு தயாராகியிருக்கும் ஆளுங் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அது தொடர்பான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காகத் தமது சார்பில் பிரதிநிதியொருவரை நியமித்திருக்கிறார்.

ஏற்கனவே இவ்வார முற்பகுதியில் பிரதமருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமருடனான நேரடி விவாதத்தை ஒழுங்கு செய்வதற்காக தாம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவை நியமித்திருக்கிறாரெனவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தமது பிரதிநிதியொருவரை நியமித்து இதற்கான ஒழுங்குகளை செய்ய வேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

இதற்கமைய விவாதத்திற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவை நியமித்திருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விவாதத்தில் பங்குபற்றுவதற்கான தமது ஒழுங்குகளை அவர் செய்வாரென்று நேற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அறிவித்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் ஐ.தே.க. தலைவர் ரணிலும், பிரதமர் மஹிந்தவும் நேரடி விவாதமொன்றில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (எ-க)


## பயிற்சிப் பத்திரிகையாளர்கள் (JOURNALIST TRAINEES)
## பயிற்சிப் பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் (PHOTO JOUNRALIST TRAINEES)

- ★ துடிப்புமிக்க இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- ★ பயிற்சியாளர்கள் ஆகக் குறைந்தது ஜி.சீ.ஈ உயர்தரம் கல்வித் தகைமை பெற்றிருக்க வேண்டும்.
- ★ பத்திரிகைத் துறையில் சுயமான ஆர்வமும், தொழில்புரிய - வேண்டும் என்று விருப்பமும் உள்ளவர்களே எமக்குத் தேவை.
- ★ கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பத்திரிகை அலுவலகங்களின் ஆசிரியபீடங்களில் இணைந்து பயிற்சிபெற ஆயத்தமாக இருக்கவேண்டும். பயிற்சிக்காலத்தில் மூன்று மாதங்கள் இந்தியாவிலும் சிறப்புப் பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்படும்.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை நாளை ஞாயிற்றுக் கிழமை (13.11.2005) இற்கு முன்பாக 'உதயன்' பணிமனையில் நேரில் கையளிக்கவும்.

விண்ணப்பித்தோருக்கான எழுத்துப்பரீட்சை 14.11.2005 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு உதயன் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.


### போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது

ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரை பொரலஸ்கமுவ பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து நேற்றுமுன்தினம் பொரலஸ்கமுவவில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலீஸார் அந்த வீட்டினுள் வைத்து இவர்களை கைது செய்துள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்ட சமயம் இவர்களிடமிருந்து போதைப் பொருள்கள் ஏதும் கைப்பற்றப் படவில்லையென பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பொலீஸார் இவர்களைச் சுற்றிவளைத்துள்ளதை அறிந்த இம்மூவரும் தங்கள் வசமிருந்த போதைப் பொருள்களைத் தீ மூட்டி எரித்துவிட்டனர் எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-க)


## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

★ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

(42677)

**பிள்ளையார் இன்**

அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.


## மரண அறிவித்தல்

### தம்பையா நடராசா

*[இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள படவரைஞர்]*

நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த தம்பையா நடராசா அவர்கள் 09.11.2005 புதன்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோகமலரின் அன்புக் கணவரும் சுதாகர் (பொறியியலாளர், அமெரிக்கா) அவர்களின் அன்புத் தந்தையும் ஜெகஜனனி (அமெரிக்கா) அவர்களின் அன்பு மாமனும் அஞ்சலியின் (அமெரிக்கா) அன்புத் தாத்தாவும் முத்துக்குமாரு, செந்திவடிவேல், சபாரத்தினம், கதிராசிப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமலிங்கம், சுந்தரலிங்கம் (U.K), தியாகலிங்கம் (இந்தியா), உருத்திரலிங்கம் (உகண்டா), திருமதி வேதநாயகமலர், தில்லைநாதன், சாந்தமலர், ஆனந்தராசா, சோதிமலர், மனுவல் (உகண்டா), சிவசுப்பிரமணியம் (நடனமுருகன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஆனந்தராசா
(இலங்கை வங்கி, பருத்தித்துறை).

*'லிங்க வாசா',*
*பிரதான வீதி, நெல்லியடி,*
*கரவெட்டி.*

(42619)(21.16.46)



மகிழ்வுடன் இருப்பதே அனைவரினதும் அவா. அந்த ஆசை பூர்த்தியாகாமல் இருப்பது நாம் விட்ட தவறுகளால் தான். ஜனாதிபதிப் பதவிக்கு கந்தக நிலத்தில் வெற்றுக் கால்களால் நடந்து சென்று முன்னேறிய தைரியமான மனிதரைத் தெரிந்தெடுங்கள். பொருளாதாரம் சமமாகப் பகிரப்பட்டால் நாம் அனைவருமே செல்வந்தர்தான்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட

S.V.H.

# தரமான தளபாடங்களைத் தயாரிக்க யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலை தேவை

## 'மங்களா' நிறுவன உரிமையாளர் கருத்து



யாழ்.கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 'மங்களா காட்சி அறை' உரிமையாளர் குமாரசாமி ஜெயந்தன் தமது வியாபார அனுபவங்கள் தொடர்பாக உதயனுக்கு வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகின்றது.

**கே.:** உங்களுடைய ஆரம்ப காலத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்களேன்?

ப.: யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பரமேஸ்வராச்சந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், யாழ்.செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் எனது ஆரம்பக்கல்வியைத் தொடங்கினேன். பின்னர் கொக்குவில் இந்துவில் உயர்தர வகுப்பில் இணைந்து படித்தேன்.

நான் 6ஆம் வகுப்பு படிக்கும்போது எனது தந்தையை இழந்தேன். வருமானம் போதாத காரணத்தால் நான் வீட்டில் சிறிய கோழிப் பண்ணை அமைத்து வருமானம் ஈட்டினேன். வியாபாரத்தில் அதிக நாட்டம் காட்டியதால் உயர்தர வகுப்புடன் எனது படிப்பை நிறுத்தி விட்டேன். பின்னர் முழு மூச்சாக வியாபாரத்தில் இறங்கிவிட்டேன்.

**கே.:** உங்களுக்கென்று சொந்தமாக எப்போது நிறுவனம் அமைத்தீர்கள்?

ப.: உயர்தரம் படிக்கும் காலத்தில் ஆள்களை வைத்து கே.கே.எஸ்.வீதியில் 'தையலகம்' ஒன்றை நடத்தினேன். பின்னர் வேறு ஒரு பெயரை வைத்து கடையை விஸ்தீரணம் செய்தேன்.

**கே.:** 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற இடப்பெயர்வு உங்களை எந்த வகையில் பாதித்தது...?

ப.: 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் இருந்தோம். சாவகச்சேரியில் தையல் கடையை நடத்தினேன். எனது கடையில் வேலைசெய்தவர்களும் என்னுடன் வந்திருந்தனர். அதனால், கடையைத் தொடரக் கூடியதாக இருந்தது.

ஆயினும், அந்தச் சூழ்நிலையில் தையல் கடையில் வருமானம் போதாமல் இருந்தமையால், தையல் கடையுடன் தேநீர் கடையொன்றையும் நடத்தினோம். பின்னர் தொடர்ந்து வந்த இடப்பெயர்வில் நான் எனது கடையை வன்னிக்கு கொண்டு சென்றேன். அப்போது எனது குடும்பத்தினரை விட்டுவிட்டுச் சென்றேன். கடையை வேறொருவரிடம் ஒப்படைத்து விட்டு, எனது கத்தரிக்கோலுடன் இங்குவந்து குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டேன்.

பின்னர் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தில் எனது கடையின் முழுப் பொருள்களும் அழிந்துவிட்டன. அது எனக்குப் பாரிய இழப்பாகவே இருந்தது. என்ன செய்வது, ஏது செய்வது எனத் தவிக்கவேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது.

எனது அம்மாவின் உதவியுடன் 1996 ஆம் ஆண்டில் மீண்டும் யாழ்.பஸ்நிலையப் பகுதியில் தேநீர்க்கடையை ஆரம்பித்தேன். அதனைத் தொடர்ந்து தையல் கடையையும்


### தொழில் வளம் - குகா

அதேயிடத்தில் ஆரம்பித்தேன். அவ்வாறு எனது வியாபாரம் தொடர்ந்தது.

**கே.:** தளபாடக் கடை போடும் எண்ணம் எப்படி உங்களுக்கு ஏற்பட்டது?

ப.: தளபாடக் கடை போடுவதற்கு நான் எண்ணவே இல்லை. எனது நண்பர் ஒருவரின் தாயார் 45 வருடங்களாக யாழ்.கஸ்தூரியார் வீதியில் தளபாட விற்பனை நிலையம் ஒன்றை நடத்திவந்தார். 1998 ஆம் ஆண்டு அவர் இந்தியா செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதால் என்னிடம் கடையை ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்டார். அதன் பின்னரே நான் தளபாடக் கடையை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**கே.:** தற்போதும் கஸ்தூரியார் வீதியில் நீங்கள் தளபாடக் கடையை நடத்துகின்றீர்களா?



ப.: இல்லை. நண்பனின் தாயார் இந்தியாவில் இருந்து வந்து தனது கடையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

**கே.:** உங்கள் அனுபவத்தில் மறக்க முடியாத அனுபவம் என எதையாவது குறிப்பிட விரும்புகிறீர்களா?

ப.: ஒன்றை இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். முதலில் நான் நடத்திய தளபாடக் கடை வாடகைக்கே எடுக்கப்பட்டிருந்தது. நண்பனின் தாயார் அதனை விலைக்கு வாங்குமாறு கேட்டிருந்தார். அவருக்காக கடையின் கட்டட உரிமையாளருடன் கதைத்து, வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கையில், அதனை வேறொரு கடை உரிமையாளர் அதிக பணம் கொடுத்து தனது உரிமையாக்கிக்கொண்டார். இந்த விடயம் என்னை வேதனைக்குள்ளாக்கியது. இதனை என்னால் மறக்க முடியாதுள்ளது.

**கே.:** தற்போது நீங்கள் ஆரம்பித்துள்ள மங்களா காட்சியறைபற்றி....?

ப.: தளபாட வியாபாரம் பிடித்துக் கொண்டதால் அதனை விட மனமின்றி இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன். எமது வியாபாரத்திற்கு வாடிக்கையாளர்கள் தெரிவுசெய்து தளபாடப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு போதிய இடவசதி அவசியம். அதனைக் கருத்திற்கொண்டே இந்தக் காட்சியறையை உருவாக்கினேன். இங்கு ஒரு கூரையின் கீழ் தளபாடப் பொருள்கள் மின்சார உபகரணங்கள், ஆடம்பரப்பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**கே.:** உங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமாய் அமைபவர்கள் பற்றி....?

ப.: எனது குடும்பத்தினர், உறவினர், நண்பன் ஆகியோருடன் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, வர்த்தக வங்கி என்பவற்றையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

**செவ்வி: பகீரதன்**

**கே.:** யாழ்.மாவட்ட வியாபாரிகளுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்....?

ப.: விலை அதிகம் என்றாலும் தரமான பொருள்களை வழங்க முன்வரவேண்டும். அந்தக் குறிக்கோளை அடிப்படையாக வைத்து வியாபாரிகள் செயற்படவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் சில வியாபாரிகள் தரம் குறைந்த தளபாடங்களை வீதி வீதியாகக் கொண்டு சென்று குறைவான விலையில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால், எமது பொருள்களின் விலையைப் பார்த்து வாடிக்கையாளர்கள் ஏன் விலை அதிகமாகக் கூறுகிறீர்கள் எனக் கேட்கிறார்கள். இவ்வாறானவர்கள் பொருளின் தரத்தைக் கவனிக்க

(11ஆம் பக்கம் பார்க்க)

# குழாய் பொருத்தும் துறையில் இளைஞருக்கு குறுகியகாலப் பயிற்சி

## 'எஸ்லோன்' நிறுவனம் வழங்குகின்றது

'எஸ்லோன்' லங்கா நிறுவனத்தினரால் யாழ்ப்பாணத்தில் இளைஞர்களுக்குக் குழாய் பொருத்துனர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி பெறும் குழாய் பொருத்துனர்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்காக கொழும்பில் இருந்து நிறுவனத்தின் பொருள் அபிவிருத்தி முகாமையாளர் ப.மகாதேவன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

தமது நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி அவர் அளித்த செவ்வி இது.

**கே.:** இந்நிறுவனத்தில் ஆரம்பகால செயற்பாடுகள் தொடர்பாக கொஞ்சம் கூறுங்கள்?

ப.: இந்நிறுவனமானது, ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை - சுமார் 47 வருடங்களாகத் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**கே.:** நிறுவனத்தின் செயற்பாடுகள் எனக் கூறுவது வியாபார அபிவிருத்தி தொடர்பானவையா? அல்லது சேவை நோக்கம் உடையவையா?

ப.: எமது நிறுவனம் ஓர் தனியார் நிறுவனம். என்றாலும், வியாபார அபிவிருத்தியை மட்டும் குறிப்பாக இலாபநோக்கத்தை மட்டும்கொண்டு செயற்படவில்லை. எமது செயற்பாடுகளில் சேவை நோக்கமும் அதிகளவில் உள்ளது.

**கே.:** உங்களது நிறுவனம் ஆற்றிவரும் சேவை எவ்வகையில் அமைந்துள்ளது?

ப.: எமது நிறுவனம் இலங்கையில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இளைஞர்களுக்குக் குழாய்கள் பொருத்துதல் தொடர்பாக பல்வேறுபட்ட இலவசப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாக இலங்கையில் 25 கிளைகள் உள்ளன. இந்தக் கிளைகளின் ஊடாக பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இந்த வகுப்புகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிகளைப் பெற்றுவருகிறார்கள்.

**கே.:** வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் பயிற்சி பெறுபவர்கள் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

ப.: வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நாங்கள் இலவசப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்ற போது அவர்களின் தொழில் நுட்பம் சார்ந்த அதிகூடிய திறமைகளை நாங்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.



நாங்கள் குழாய் பொருத்துதல் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு எவ்வித கல்வித் தகைமைகளையும் எதிர்பார்க்கவில்லை. தொழில் ஆர்வம் கொண்டவர்களை மட்டுமே எமது நிறுவனம் விரும்புகின்றது.

**கே.:** யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் தொழில் பயிற்சி பெறுகின்றார்கள். இவர்களின் திறமைகளையும் ஆர்வத்தையும் அதிகரிப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

ப.: யாழ்ப்பாணத்தில் 90 பேர் குழாய் பொருத்துதல் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுவருகிறார்கள். இவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை திறமையான முதல் 10 பேர் தெரிவுசெய்யப்பட்டு பணத்தொகைப் பரிசில் வழங்கப்படுகிறது. முதல் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா வழங்குகிறோம்.

**செவ்வி - சுதாகரன்**

திறமைகளின் அடிப்படையில் ஏனையோருக்கும் ஊக்குவிப்பு வழங்குகிறோம்.

இவ்வாறு இலங்கை முழுவதும் பயிற்சியாளர்களுக்குப் பரிசில் வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தமது நிறுவனத்தின் குழாய் பொருத்துனர் சங்கத்தில் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு காப்புறுதி வழங்குகிறோம்.

(11ஆம் பக்கம் பார்க்க)



*சேமிப்புத்தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையினர் அண்மையில் நடமாடும் வங்கிச் சேவை ஒன்றினை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.*

*கிளை முகாமையாளர் ப.சச்சிதானந்தம், மாதகல் பகுதி பங்குத் தந்தை கிறிஸ்தோப்பர் மற்றும் வங்கியின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.*

*(3-13)*



*பாடசாலை மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை வங்கியினரால் பாடசாலைகள் தோறும் "பொன்அரும்புகள் மன்றம்" உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.*

*அந்த வகையில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி பொன்அரும்புகள் மன்றத்தினர் மிகக் குறுகிய காலத்தில் அதிக தொகையைச் சேமித்தமையைப் பாராட்டி அந்தப் பாடசாலைக்கு ஒரு தொகை நூல்கள் வழங்கப்பட்டன.*

*இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.பிரதேச முகாமையாளர் எ.ரி.ஏ.தேவராஜா, யாழ்.மேற்றரக் கிளை பிரதான முகாமையாளர் என்.சிவரத்தினம் ஆகியோரையும் கல்லூரி அதிபர் திருமதி ரி.இராஜரட்ணம், மாணவ சேமிப்புப் பிரிவு இணைப்பதிகாரி வி.ஆர்.சுதாகரன் ஆகியோரையும்படத்தில் காணலாம். (3-203)*

# மனித உரிமைகள் தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் தெற்கு, நவ.12

எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலயக் கல்வி அலுவலகங்களூடாக பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சித்திரப் போட்டி என்பன இடம்பெற்று வருகின்றன.

இதில் வலிகாமம் கல்வி வலயத்தில் நடை பெற்ற போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:

**பேச்சுப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:-**

தெ.சிவரூபன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), மோ.மைதிலி (வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி), யோ. கார்த்திகா (தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு:-**

அ.நிகோய் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), யோ.சுதாகரன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), சி.சாருஜா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:-**

ஸ்ரீ.காந்தன் சுபாஸ்கன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), த.வேணுஷா (அளவெட்டி அருணா சலம் வித்தியாலயம்), இ.வியனுதா (வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு:-**

சி.லகிதா (இணுவில் இந்துக் கல்லூரி), த.நிரோஜினி (பண்ணாகம் மெய்கண்டான் மத்திய மகா வித்தியாலயம்), க.கஜேந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி).

**கவிதைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:-**

ஜெயராசா கவிதா (கந்தரோடை ஸ்கந்தவரோய தயக் கல்லூரி), பா.நீதுஜன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), ம.டிலக்ஷா (மயிலணி சைவ மகாவித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு:-**

க.கணேந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி), சி.லகிதா (இணுவில் இந்துக் கல்லூரி), தே.ரஜிதா (இணுவில் இந்துக் கல்லூரி).

**சித்திரப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:-**

வ.சண்முகராஜா (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி),யோசிவேந்தன்(இணுவில் மத்தியகல்லூரி), கே.நிருஜன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு:-**

ஸ்ரீ.வாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி), கி.நிசாந்தன் (இணுவில் மத்திய கல்லூரி), ப.பிரசாத் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)' (ஒ-152)



## எமது வாழ்த்து

திரு.வைகுந்தவாசன்
பிரதீபன்

{B.A(HONS) SPECIAL DEGREE IN ECONOMICS}

யாழ். பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது பாடசாலையின் முன்னாள் தொண்டர் ஆசிரியர் தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த வை. பிரதீபன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

யா- அம்பன் அ.மி.த.க பாடசாலை,குடத்தனை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(42617)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 26 * 03 * 1923



விண்ணுலகில் 14 * 10 * 2005

அமரர்

### நாகப்பர் தம்பித்துரை

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் அமரர் நாகப்பர் தம்பித்துரை 14.10.2005 இல் சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இரணைமடுவில் இன்று நடைபெறும் அந்தியேட்டியிலும், நாளை (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் கிளிநொச்சி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல : 403A,
திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்,
குடாரப்பு,
நாகர்கோவில்.

(42653)

## IIS

இக் கல்வி ஆண்டிற்கான இறுதி பிரிவுகள் ஆரம்பம்.

19.11.2005
21.11.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

புலமைப்பரிசிலில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களே இச்சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

## வேலை வாய்ப்பு

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புகள் உள்ளன.

பயணம் 1 1/2 மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சு வேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர் / ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**

பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம் 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

தொடர்பு : மைக்கல்
0777 279813

குறிப்பு : முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42385)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத் தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | --- |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் | 400 | --- |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | --- |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு
பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
வீட்டுப் பணிப்பெண்கள் 200 பேர்
வயதெல்லை 19-45

தொடர்பு: 0777 279813
மைக்கல்

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42384)

## அனைவருக்கும் புலமைப்பரிசில்

## COMPUTER EXPRESS
Institute of Information Technology

### புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Honours Diploma in Computer Science | - 6 மாதம் | 9,000 | 1,800 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in Desktop Publishing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 6,000 | 1,200 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 6,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 750 |

50% OFF

### Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

December 03ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 19/11/2005
Batch II - 20/11/2005
Batch III - 25/11/2005
Batch IV - 26/11/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-2228250, 0777 222422

## தேவை

யாழ். நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்தரம் (ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட) சித்தியுடன் அனுபவமுள்ளவராகவும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:2744
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (42579)

## தேவை

எமது நிறுவனத்தில் விற்பனையாளராகப் பணிபுரிவதற்கு வேலையாள்கள்(ஆண்கள்) தேவை. சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

(C/46100)

## தேவை

எமது நிறுவனத்தில் கணக்காளராகப் பணிபுரிவதற்கு ஆள்கள் தேவை.
சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

(C/46098)

# அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள்; இதனால் மாணவருக்கு இடையூறுகள்

### தடுத்து நிறுத்த ஆசிரியர் சமூகம் வேண்டுகோள்

மண்டைதீவு,நவ12

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சை நெருங்கி வரும் சமயத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு இடையூறாக ஒலிபெருக்கிகளை பலத்த சத்தத்துடன் பலரும் பயன்படுத்தி வருகின்றனர் என்று ஆசிரிய சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

குடாநாடு கல்வி அபிவிருத்தியில் பின் தங்கியுள்ளதாகக் குறைகூறப்படும் தற்போதைய காலகட்டத்தில் சமூகப் பொறுப்பற்ற சிலரின் இத்தகைய செயற்பாடுகள் மாணவரைக் கல்வியில் பின்தங்கச் செய்துவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

உணவகங்கள், சமய நிகழ்வுகள்,வீட்டுக் கொண்டாட்டங்கள் போன்றவற்றின்போது பிறருக்கு இடையூறாக அதிக சத்தத்தில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மாணவர்கள் கோருகின்றனர்.

இதேவேளை, சில வீடுகளில் வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப்பெட்டி போன்றவற்றை அதிக சத்தத்தில் ஒலிக்க விடுவதால் அயல் வீடுகளில் உள்ளவர்கள் குறிப்பாக வயதானவர்கள் உறக்கம் கலைந்து பாதிப்படைகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் இரண்டாம் மற்றும் முதலாம் குறுக்குத் தெருக்களில் அதிக சத்தத்துடன் தொலைக்காட்சிப்பெட்டிகளை பயன்படுத்தியவர்கள் மீது சமீபத்தில் யாழ். பொலீஸார் நடவடிக்கை எடுத்தனர் என்றும்-

குடாநாடெங்கிலும் இத்தகைய நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் - அதிக சத்தத்தால் இடையூறுகளை அனுபவிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-88)

## 'ட்றோலர்' படகைப் பயன்படுத்தி கடற்றொழில் செய்ய மீள அனுமதி

குருநகர்,நவ.12

குடாக்கடலில் ட்றோலர் மூலம் மீன்பிடிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் கடந்த 9 ஆம் திகதி முதல் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். குருநகரில் ட்றோலர் மூலம் மீன்பிடித்து வரும் 'ட்றோலர்' உரிமையாளர்கள் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தில் சங்க நிர்வாகிகளுடன் நடத்திய கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இந்த அனுமதி நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ட்றோலர் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது.

அந்த நிபந்தனைகளின் படி வாரத்தில் நான்கு தினங்கள் மட்டுமே 'ட்றோலர்' மூலம் மீன்பிடிக்க முடியும் ஏனைய பிரதேச மீனவர்களின் கடல் எல்லைக்குள் தொழிலில் ஈடுபடக்கூடாது.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட 'ட்றோலர்' உரிமையாளர்கள் கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் குடாக்கடலில் மீண்டும் 'ட்றோலர்' மூலம் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-51)

### நிவாரண முத்திரை விநியோகம்

தென்மராட்சி,நவ.12

எழுதுமட்டுவாழ், கரம்பகம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கான இடம் பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர்அலுவலகத்தில் நிவாரண முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அப்பிரிவுக் கிராம அலுவலர் அறிவித்துள்ளார் (ஒ-11)



சித்தன்கேணி சனசமூக நிலையமும் மாதர் சங்கமும் இணைந்து நடத்திய வாணி விழாவில் இடம்பெற்ற சிறுமிகளின் கலைநிகழ்வுகளில் ஒன்றைப் படத்தில் காணலாம். (படம்: சங்கானைச் செய்தியாளர்)

## பாஷையூர்ப் பகுதி வாய்க்காலில் குப்பை கூளங்களால் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,நவ.12

பாஷையூர் புதுக்குடியிருப்பு பகுதிக்கும் புனித அந்தோனியார் மகளிர் ஆரம்ப பாடசாலைக்கும் இடையில் அமைந்துள்ள வாய்க்கால் கடந்த 15 வருடங்களாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

இந்த வாய்க்கால்களில் குப்பை கூளங்கள் நிறைந்துள்ளன.

நீர் வழிந்து ஓட முடியாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் இப்பகுதியில் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (த-190)




### செம்பியன்பற்றுக்கு கழிவகற்றும் வாகனம்

செம்பியன்பற்று,நவ.12

பருத்தித்துறை பிரதேசசபையினால் செம்பியன்பற்று உப அலுவலகத்திற்கு கழிவகற்றும் வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மலசலகூடக் கழிவுகளை அகற்றுவதற்காக இது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இக் கழிவுகள் அகற்றப்பட்ட போதும் சரியான முறையில் அகற்றப்படாமையால் தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயம் இருந்து வந்தது. அதுவும் மழைகாலத்தில் இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்து வந்தமைகுறிப்பிடத்தக்கது.(ஒ-36)



மானிப்பாய் லயன்ஸ் கழகம் மாதகல் பகுதியில் இலவச மருத்துவ முகாமை நடத்தியது. யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் இதில் சிகிச்சை வழங்கினர்.அப்போது முதியவர் ஒருவருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)

## 'வீரக்குடிமகன்' விருதுபெற்றவர் லயன்ஸ் கழகத்தால் கௌரவிப்பு

தென்மராட்சி,நவ.12

'வீரக்குடிமகன்' விருதுபெற்ற தென்மராட்சி இளைஞர் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் மீசாலையில் உள்ள ஆலயக் கேணியில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக கொடிகாமம் பாலாவி வடக்கைச் சேர்ந்த துரைசிங்கம் குமரநாதன் என்பவருக்கு கொழும்பில் இடம் பெற்ற தேசிய விருது வழங்கும் விழாவில் 'வீரக்குடிமகன்' விருது வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக வடக்கு மாவட்ட இணைப்பாளர் லயன் ஜே.முத்துக்குமாரசாமி இந்த இளைஞனுக்கு தங்கப் பதக்கம்சூட்டிக்கௌரவித்தார். (ஒ-117)

### விதைநெல் விநியோகம்

செம்பியன்பற்று,நவ.12

நல்லூர் கமநல சேவை நிலையத்தில் ரி.353 ரக உயர்தர விதை நெல் உள்ளதாகவும்-

இவ் விதை நெல் தேவையான விவசாயிகள் புலோலி கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ம-

யாழ்.பெரும்பாக உத்தியோகத்தர் ஆர்.உருத்திரேஸ்வரன் தெரி வித்தார். (ஒ-36)

## சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் சேதம்

யாழ்ப்பாணம்,நவ.12

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பயணிகள் தங்கும் கட்டடத்தில் மழை பெய்யும் வேளை ஒழுக்கு ஏற்படுவதாகவும்-

இதனால் பயணிகள் குடை பிடித்துக் கொண்டு நிற்க வேண்டியுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

பஸ் நிலைய கூரைத் தகடுகளில் துவாரங்களும், விரிசல்களும் காணப்படுகின்றன. இவற்றினூடாக மழைகாலத்தில் மழை நீர் வழிகிறது. இதனால் அங்குள்ள இருக்கைகளில் பயணிகள் அமர முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்த வேளையில் முழுமையாக சேதமடைந்த பஸ் நிலையக் கட்டடம் சாவகச்சேரி நகர சபையினால் புனரமைக்கப்பட்டது. நகர்ப் பகுதியில் இடம்பெற்ற கல்வீச்சுச் சம்பவங்களின் போது இந்தக் கூரைத் தகடுகளில் ஓட்டைகளும் வெடிப்புகளும் ஏற்பட்டன என்று கூறப்படுகிறது.

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உபகரணங்கள்

கரவெட்டி,நவ.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு பிளாஸ்ரிக் படகுகள், இயந்திரங்கள், பிளாஸ்ரிக் கட்டுமரங்கள் போன்றவை கடற்றொழில் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கடற்றொழில் உபகரணங்கள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் பிளாஸ்ரிக் படகுகள் மற்றும் இயந்திரங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் 8 கடற்றொழிலாளர்களுக்கும் வடமராட்சி வடக்கில் 12 பேருக்கும் வழங்கப்படவுள்ளன.

மேலும் பிளாஸ்ரிக் கட்டுமரங்கள் வடமராட்சி கிழக்கில் 8 பேருக்கும் வடமராட்சி வடக்கில் 12 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. (ஒ-70)

## மண்டைதீவு தெற்கு மக்கள் நாற்று உற்பத்தியில் ஆர்வம்

மண்டைதீவு,நவ.12

புகையிலை, மிளகாய் மற்றும் மரக்கறி நாற்று மேடைகளை அமைப்பதில் மண்டைதீவுப் பகுதி மக்கள் இந்த வருடம் கூடுதலாக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மண்டைதீவு தெற்குப் பகுதியான 6ஆம், 7ஆம், 8 ஆம் வட்டாரப் பகுதிகளிலேயே நாற்று மேடைகள் அதிகம் அமைக்கப்பட்டுள்ளன. பருவமழை பிந்திய காரணத்தால் புகையிலை, மிளகாய், வெண்காய செய்கையும் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களில் இந்த நாற்று மேடைகள் அறுவடைக்கு தயாராகிவிடும் என்று நம்பப்படுகிறது.

இங்குள்ள நாற்று வகைகள் தீவின் ஏனைய பகுதிகளில் இருந்து வரும் விவசாயிகளாலும் தென்மராட்சி மற்றும் வடமராட்சி பகுதி களில் இருந்து வருவோராலும் தேடிக் கொள்வனவு செய்யப்படுவது வழக்கமாகும்.

இங்குள்ள விவசாயிகளுக்கு குறுகியகாலத்தில் கணிசமான வருமானத்தை கொடுக்கும் தொழிலாக நாற்று உற்பத்தி இருந்துவருகின்றது. இந்தப் பகுதியில் உள்ள பசைத்தன்மையற்ற மண்ணும் தண்ணீரும் நாற்று உற்பத்திக்குப் பொருத்தமானவையாக கருதப்படுகின்றது. (ஒ-88)

## ஆனைக்கோட்டையில் திருட்டுப் பயம்

நவாலி,நவ.12

ஆனைக்கோட்டைப் பகுதியில் தொடர்ந்து இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களினால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள வீடொன்றில் திருத்த வேலைகளுக்காக கழற்றிவைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க கதவுகள் திருடப்பட்டுள்ளன.மறு நாளும் அதே வீட்டில் ரொக்கப் பணம் மற்றும் ஆவணங்கள் திருடப்பட்டன.

கடந்த வாரம் சங்கரப்பிள்ளை வீதியிலுள்ள வீடொன்றின் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணத்தையும்சைக்கிள் ஒன்றையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

மறுநாள்அதே இடத்தைச் சேர்ந்த மற்றும் இரு வீடுகளில் திருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.ஆனால், வீட்டு உரிமையாளர்கள் சத்தமிடவே திருடர்கள் ஓடித்தப்பியுள்ளனர்.

இதனால் மக்கள் எந்நேரமும் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட் டுள்ளது. (ஒ-100)

## வி.கழகத்துக்கு மதில் கட்ட உதவி

கைதடி,நவ.12

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கு சுற்றுமதில் கட்டுவதற்கென யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ரூபா ஐம்பதாயிரத்தை அண்மையில் வழங்கியுள்ளார் என வளர்மதி விளையாட்டுக் கழகத் லைவர் க. மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (ஒ-75)

## ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையத்தின் அனுமதி நீதிமன்றத்தால் ரத்து

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் உள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையத்தின் அனுமதிப்பத்திரம் நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டது.

ஐஸ்கிறீம் உற்பத்திக்கான அனுமதி பெற்ற நபரொருவர் அத்தொழிலை மேற்கொண்டு வந்தார். இதே வேளை மற்றொருவர் ஐஸ்கிறீம் உற்பத்தியில் ஈடுபட வசதியாக, அவர் தனது அனுமதிப் பத்திரத்தில் மோசடி செய்து போலி அனுமதிப் பத்திரத்தைத் தயார் செய்து வழங்கினார். அந்தப் போலி அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற நபரும் ஐஸ்கிறீம் உற்பத்தியில் ஈடுபட்டார்.

போலி அனுமதிப்பத்திரத்துடன் தொழில் நடத்தியவர் மீது கடந்த சில நாள்களுக்கு முன்னர் சுகாதார மற்ற முறையில் ஐஸ்கிறீம் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுகாதாரப் பகுதியினரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையில் போலி அனுமதிப் பத்திரம் தயாரித்த விடயம் தெரிய வந்தது. இதனையடுத்து போலி அனுமதிப் பத்திரத்தை தயாரித்த முதலாமவரின் ஐஸ்கிறீம் உற்பத்திக்கான அனுமதி இரத்துச் செய்யப்பட்டது. (ஒ-15)

# தமிழ் மக்களே!

## நீங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டியது ஏன்?

- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டு 20 வருடப்போருக்கு முடிவு கட்டியவர்.
- 10 வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 பாதையைத் திறக்க வழிவகுத்து பல சௌகரியங்களை ஏற்படுத்தியவர்.
- தமிழ் மக்கள் தமது பூமியில் சுதந்திரமாக நடமாடுவதற்கு கணிசமான அளவுக்கு உதவியவர்.
- தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கியவர் இவரே.
- சமஷ்டி முறையில் அதிகாரங்களைப் பகிர்வதே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு என்று பிரகடனப்படுத்தி உள்ளவரும் ரணிலே!
- இருள் சூழ்ந்திருந்த வடபகுதிக்கு ஒளியூட்டியவர்.
- நிரந்தர சமாதானம் எட்டப்படாத போதிலும் தமிழ் மக்களின் வாழ்வில் ஓரளவுக்கேனும் நிம்மதியை ஏற்படுத்தியவர்.
- வடக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பொலீஸ் பதிவு, சோதனைகள் என்பவற்றை நீக்கியவர் ரணிலே!
- தலைநகரில் அமைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகளை நீக்கி போக்குவரத்தைச் சீராக்கியவர். சோதனைகளுடன் வாழந்த தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தவர்.



**நாட்டின் சமாதானம் சீர்பெறவும் நிலைக்கவும் வழி செய்யக்கூடிய ஒருவர் ரணில் மட்டுமே!**

**இம்முறை தெரிவு செய்யுங்கள். பெரும் நற்பயன்களை நிச்சயம் பெறுவீர்கள்.**

ரணிலுக்கே வாக்களியுங்கள்

# ரணில் விக்கிரமசிங்கா

ஐக்கிய தேசிய கட்சி

X

# குண்டுகளை வெடிக்கவைத்து வேட்டுக்களைத் தீர்த்து அனுதாப வாக்குகளைத் திரட்டுவதற்கு சதித்திட்டம்

## பிரதமர் தரப்புக்கு எதிராக ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 12

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகளும், ஜே.வி.பி. யினரின் அவதூறு பிரசாரங்களும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மக்களின் அனுதாபத்தைப் பெற அவர்கள் புதிய யுக்தி ஒன்றைத் தயாரித்துள்ளனர். பிரதமர் பங்குபற்றும் கூட்டங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்தும், துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தும் மக்களின் அனுதாப வாக்குகளைப் பெறுவதே இவர்களின் திட்டம்.

ஜே.வி.பியினரும், பிரதமரின் பிரசார முகவரின் ஆள்களும் இணைந்து இப்படியான ஒரு சதித்திட்டத்தை விடுத்திருக்கின்றார்கள் என இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே, பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பொதுமக்களைக் கேட்டிருக்கின்றார்.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இப்படித் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தான் எவ்வழியிலாவது வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக ஜே.வி.பி. யினரின் சிந்தனைகளைத் தமது பெயரில் வெளியிட்டு விட்டார்.

ஆனால், ஜனாதிபதியும், நிதி அமைச்சரும் அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டனர். இவர்களுடைய பிரசாரங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்துவிட்டன.

கட்சிபேதமின்றி நாட்டு மக்கள் இன்று சமாதானத்தையே எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால், மஹிந்த ராஜபக்ஷவும், விமல் விரவன்ஸவும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து எறிவோம். அதிகாரப் பரவலாக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடைசிவரை அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று வீரம் பேசுகின்றனர்.

ஆனால், நிதி அமைச்சரோ, ரணில் விக்கிரமசிங்கவின் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூலம்தான், இதுவரை அழிந்து போன பொருளாதார வீழ்ச்சியை மீளக்கட்டி எழுப்ப முடிந்தது. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தன என்று பாராட்டுகின்றார்.

ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கம் ஒன்றே இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

அதோடு நின்றுவிடாமல் அரச நிறுவனங்களைத் தனியார் துறையினரிடம் ஒப்படைப்பதன் மூலம் கணிசமான தொகையை ஈட்டி, வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையில் ஒரு பகுதியையாவது சமன்படுத்த முடியும் என்று தனது வரவு - செலவுத் திட்டத்திலேயே எழுத்துமூலம் அறிவித்துவிட்டார்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துகளை நிதி அமைச்சர் தூர நோக்குடன் உறுதிப்படுத்தியுள்ளார். ஐ.தே.க., நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்றது.

சகல வழிகளிலும் தோல்வியின் எல்லையில் நின்று கொண்டிருக்கும் பிரதமர் எவரைப் பலியிட்டாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் எனத் துடிக்கின்றார்.

எனவே, இறுதிக்கட்டமாக மக்களின் அனுதாபத்தைப் பெற குறுக்குவழிகளைக் கையாளப் போகின்றனர்.

பிரதமர் கலந்து கொள்ளும் கூட்டங்களில் குண்டுகளை வெடிக்கச்செய்தும், துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் அனுதாபத்தைப் பெறத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களுடைய இந்த இரகசியத்திட்டம் கசிந்துவிட்டது. எனவே, பிரதமரின் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அப்பாவிப் பொதுமக்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் - என் திஸ்ஸ அத்தநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

அதேவேளை, தேர்தல் நடைபெற இன்னும் ஐந்தே நாள்கள்தான் இருக்கின்றன. பிரதமருடைய கொள்கைத் திட்டம் தொடர்பாக விவாதம் நடத்த ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்புக்குப் பிரதமர் இன்றும் உத்தியோகபூர்வமாகப் பதில் அளிக்கவில்லை. தேர்தல் மேடைகளில் கூறித்திரிவதைவிட்டு, ரணிலின் சவாலை உத்தியோகபூர்வமாக ஏற்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர் முன்வரவேண்டும். எமது தலைவர் ரணில்விக்கிரமசிங்க எந்த நேரத்தில், எந்த இடத்திலும் விவாதம் நடத்தத் தயார் - என்றும் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

## கட்டுநாயக்காவில் 11 தமிழர்கள் கைது

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுற்பட்ட 11 தமிழர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் கடவுச்சீட்டுகளோ,விமானப் பயணத்துக்கான பயணச்சீட்டுகளோ காணப்படவில்லையெனப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மாலைதீவுக்கு செல்லும் விமானத்தில் செல்லவிருந்த சமயம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஐந்து பெண்கள் உட்பட 11 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது.

சிவில் விமானசேவை கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

## ரணிலுக்கு எதிராகப் பொய்ப் புகார் செய்த மங்கள சமரவீர மீது நடவடிக்கை எடுங்கள்!

### லஞ்ச, ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 12

ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக லஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் பொய்யான முறைப்பாட்டைச் செய்த, அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி லஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் புகார் மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் சட்டத்தரணிகள் குழு ஒன்று இந்த மனுவை நேற்று ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது பிரதமரின் அலுவலகத்திற்கு என இறக்குமதி செய்யப்பட்ட கணினிக்கொள்வனவில் பலகோடி ரூபா மோசடிகள் இடம் பெற்றிருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர லஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டைப் பரிசீலனை செய்த ஆணைக்குழு அமைச்சரின் முறைப்பாடு எந்தவிதமான ஆதாரங்களும் அற்றது என நிராகரித்துவிட்டது.

'அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சேறுபூசும் வகையிலேயே திட்டமிட்டு இந்தப் பொய்யான முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அமைச்சரின் இச் செயல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, லஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.' - இப்படி ஐக்கிய தேசியக் கட்சி நேற்று சமர்ப்பித்த புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ - 02)

## குழாய் பொருத்தும்.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக இயற்கை மரணம் எய்துபவர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும் விபத்துச் சம்பவங்களினால் உயிரிழப்பவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் வழங்கப்படுகிறது.

**கே.:** உங்களால் வழங்கப்படுகின்ற பயிற்சிகளைக் கற்றுப் பெறப்படும் சான்றிதழ்கள் பிற இடங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்குப் பயன்பெறுமா?

**ப.:** நிச்சயம் பயன்பெறும்; உதாரணமாக யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்றவர்களில் ஒருவர் அதாவது நெல்லியடி பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் தேசிய நீர்வடிகால் அமைப்புச் சபையில் நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்.

எந்த ஒரு நிறுவனத்திலும் ஒருவர் வேலை வாய்ப்பினைத் தேடிசெல்கிறபோது அவர்களிடம் இருந்து பயிற்சி பெற்ற சான்றிதழ் கோரப்படுகின்றது. எனவே, எமது நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் பயன் உள்ளதொன்றாகவே அமையும்.

**கே.:** போலியான தரம்குறைந்த 'எஸ்லோன்' குழாய்கள் விற்பனை செய்யப்படுகின்றதே. இது தொடர்பான உங்கள் கருத்து என்ன?

**ப.:** போலியான, தரம் குறைந்த குழாய்கள் விற்பனை செய்யப்படுகின்றனதான். இது தொடர்பாக பயனாளிகள் விழிப்புடன் இருக்க வேண்டும். எமது 'எஸ்லோன்' குழாய்களில் 'எஸ்லோன் லங்கா' என எழுத்துக்கள் பதியப்பட்டிருக்கும். போலியான குழாய்களில் இவ்வாறான எந்தவிதமான எழுத்துக்களும் பதியப்பட்டிருக்க மாட்டாது. எனவே, பயன் பெறவிரும்பும் பயனாளிகள் குழாய்கள் வாங்கும் போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

பலர் எம்முடன் தொடர்புகொண்டு குழாய்களின் தராதரம் குறிப்பாக குறைநிறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

பயனாளிகளால் சுட்டிக்காட்டப்படும் குறைகளை நேரில்சென்று பார்வையிட்டு வருகின்றோம்.

**கே.:** உங்களுடைய நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற குழாய்களின் தரக்குறைவுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவுள்ளீர்களா?

**ப.:** எமது நிறுவனம் தற்போது புதிய வகைகளில் குழாய்களை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்காலத்தில் எந்தவித தரக் குறைவுகளும் இன்றி எமது நிறுவனம் தனது செயற்பாட்டை இலங்கையில் வெற்றிகரமாக மேற்கொண்டுவரும். ✱

## தரமான தளபாடங்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். வியாபாரிகள் தரமான பொருள்களை விற்க முன்வரவேண்டும்.

**கே.:** உங்களுடைய வாடிக்கையாளருக்கு ஏதாவது கூறுங்கள்....?

**ப.:** பொருள்களின் விலைகளைப் பார்க்காமல் தரத்தினைப் பார்க்கவேண்டும். போலியான பொருள்களை வாங்கி ஏமாறக் கூடாது. நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பொருள்களை விநியோகிக்கின்றோம். இதற்கு எமது ஊழியர்களே உதவுகின்றனர். அவர்கள் பொருள்கள் சேதமடையாமல் வீடுகளில் சேர்க்கின்றனர். மொத்தமாக பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு இலவசமாக விநியோகத்தினை மேற்கொள்கின்றோம்.

**கே.:** உங்களுடைய வியாபாரத்தில் இடையூறுகள் எதையாவது சந்திக்க நேரிடுகின்றதா?

**ப.:** கொழும்பில் இருந்து இங்கு பொருள்களைக் கொண்டு செல்வதற்கு 2 தினங்களுக்கே அனுமதி தருவார்கள். 3 இடங்களில் பொருள்களை ஏற்றி இறக்கி செல்வதால், முகமாலையிலே அனுமதி முடிந்து விட்டதைக் காரணம் காட்டி மறித்து வைத்து விடுவார்கள். பின்னர் யாழ்ப்பாணம் வந்தே அனுமதியைப் புதுப்பித்துச் சென்று லொறியை மீட்டுவரும் சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகின்றது. பொருள்களை ஏற்றி இறக்குவதனாலும் அவை சேதமடைகின்றன. அத்துடன், வவுனியாவிற்கு அப்பால் உள்ள சோதனை நிலையங்களில் பொலீஸாருக்கும் அதிக பணம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

**கே.:** உங்களுடைய எதிர்காலத்திட்டம் பற்றி...?

**ப.:** தளபாடங்களை இறக்குமதி செய்வதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் எண்ணம் உள்ளது. இவ்வாறு தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டால் அதிக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கலாம். அத்துடன், தரமான பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கலாம். அதற்கேற்ற சாதகமான சூழ்நிலை கிடைக்குமிடத்து எதிர்காலத்தில் இவ்வாறான தொழிற்சாலை ஒன்றை உருவாக்கும் எண்ணம் உள்ளது. தென்பகுதியில் உள்ளது போல் இங்கு தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு உதவிகள் பெற்றுக்கொள்வதில் சிரமம் உள்ளது. ✱

## ரணிலுக்கு சிரிக்கவே தெரியாதாம் 'பல்டி' அடித்தவர் கூறும் காரணம்

கொழும்பு,நவ.12

''ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிரிக்கவே தெரியாது . ஆனால் கட்டாயமாக இரண்டு இடங்களில் மட்டும் சிரிப்பை வரவழைத்துக்கொள்வார். ஒன்று அவருக்கு மிகவும் வேண்டியவர்களிடம். . இண்டாவது ஊடகவியலாளர்களிடம். சிரிக்கவே தெரியாத ஒரு மனிதருடன் எப்படி தொடர்ந்து பணிபுரிய முடியும்? அதனால் தான் மனிதர்களுடன் பழகத்தெரிந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்து விட்டோம்''

- இப்படிக் கூறுகின்றார், இரத்தினபுரி மாவட்ட பெல்மதுளை பிரதேசசபையின் ஐ.தே.க.தலைவரான தயாதிஸ்ஸ அபேகுணவர்தன.

இவர் முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற காமினி திஸாநாயக்காவின் இணைப்பு செயலாளராகவும், பெல்மதுளை பிரதேச தலைவராகவும் இருந்தவர்.

கடந்த வாரம் முதல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்பட ஆரம்பித்துள்ளார்.

அதற்கான காரணத்தை அவர் இப்படிக் கூறுகிறார்.

''எனது குழந்தை மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றான். எல்லா டக்டர்களும் கைவிட்டு விட்டனர். எனது பிள்ளையைக் காப்பாற்ற எப்படியாவது உதவி செய்ய வேண்டும்'' என விக்கிரமசிங்கவிடம் கேட்டேன்.

ஆனால் அவரோ ''பணம் இல்லாவிட்டால் ஏன் தேர்தலில் குதித்தீர்?'' என பல பேர் முன்னிலையில் முகத்தில் அடித்தது போல் கூறிவிட்டார்.

இவர்தான் மேடைகளில் குழந்தைகளைப் பற்றிப் பேசுகின்றார். சிறிதும் மனிதாபிமானம் இல்லாத இந்த மனிதருக்கு எப்படி ஆதரவு வழங்க முடியும்?

இதனால்தான் பெல்மதுளை தேர்தல் தொகுதியில் நானும். ஐ.தே.க. ஆதரவாளர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கத் தீர்மானித்து விட்டோம். '' என்றும் கூறினார் தயாதிஸ்ஸ.

நேற்று மாலை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பெல்மதுளை பிரதேச சபைத் தலைவர் தயாதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

## வந்தாறுமூலையில் துப்பாக்கிச் சூடு; இருவர் காயம்!

மட்டக்களப்பு, நவ.12

மட்டக்களப்பு வந்தாறுமூலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இரு இளைஞர்கள் மீது, இனம்தெரியாதோரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை அம்பலத்தடிச் சந்தியில் வசிக்கும் 24 வயதுடைய நவரத்தினம் கண்ணன், 20 வயதுடைய கணேசமூர்த்தி சந்திரகுமார் ஆகிய இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமுற்று, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி ஏறாவூர் பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர்.

இதேசமயம் ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முகமட் அன்வர் என்பவர் படுகாயமடைந்தார். அவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்

இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்வி முகாமைத்துவ பட்டப் படிப்பின் டிப்ளோமாக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2006-2007 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்வதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி முகாமைத்துவப் பட்டப் படிப்பின் டிப்ளோமாக் கற்கைநெறி முழுநேரக் கற்கை நெறியாகவும் பகுதி நேரக் கற்கை நெறியாகவும் நடைபெறவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை கல்வியியலாளர்கள் சேவை, இலங்கை அதிபர்கள் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையில் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் இதற்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் -

அத்துடன், விண்ணப்பதாரர் பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்றும் தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

தகுதியானவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்.மாவட்ட சர்வோதய இயக்கம் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நோக்குடன் மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பதற்கான பயிற்சிகளை இலவசமாக வழங்கவுள்ளது.

18 வயது தொடக்கம் 22 வயதுவரையான இளைஞர்களுக்கு 6 மாதங்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு போக்குவரத்துப் படியும் சீருடையும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சியின் முடிவில் மோட்டார் சைக்கிள் பழுது பார்ப்பதற்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்புடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

* * *

நாயன்மார்கட்டுப் பாரதி சனசமூக நிலையம் இளைஞர், யுவதிகளுக்குத் தையற் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

ஜனவரி மாதம் தொடக்கம் இந்த பயிற்சி நெறியில் வழங்கப்படவுளது என்று நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(203-111-152)

# மக்கள் முகம்



யாழ். மாவட்ட செயலகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி உயர்வு பெற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் பி.ஏ.பட்டதாரியாவார். அத்துடன், ''சைவப் புலவர்'' பட்டத்தினையும் பெற்றுள்ளார். மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ள இவர் யாழ் . வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார்.

(3-204)

* * *



முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆங்கில ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய கா.செல்வராசா ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

1984 ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய இவர், கடந்த 2000 ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகராக பதவி ஏற்று தற்போது ஆங்கில உதவிக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

(ஓ-353-204)

# மக்கள் சேவையில்

நல்லாசிரியர் விருதுபெற்ற ஆசிரியை திருமதி விமலராசா கடம்பமலர் அண்மையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் பரிசில் வழங்கியும் பாராட்டியும் கௌரவிக்கப்பட்டார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய எட்டு மாணவர்களையும் பாராட்டுமுகமாக எடுக்கப்பட்ட விழாவிலேயே நல்லாசிரியை கௌரவிக்கப்பட்டார்.

மகாவித்தியாலய பதில் அதிபர் இ.அருணகிரிவாசன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

(3-204)

* * *

அண்மையில் நடைபெற்ற வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சிவார இறுதி நாள் நிகழ்வின்போது நீண்டகாலம் சபையில் சிறப்புற பணியாற்றிய பணியாளர்களான பொ.அரியரட்ணம், சி.விசுவநாதன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

(3-72)

* * *

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்திற்கு உதவி மாவட்டப் பதிவாளராகக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய திருமதி நாகேஸ்வரி செல்வநாயகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் முதல் இவர் பணியாற்றிவருகின்றார்.

(3-135)

# நூல் விமர்சனம்

**நூல்** : **சாரத்தியம் ''சவால்களும் சாமர்த்தியமும்'**
"DRIVING CHALLENGES AND THE ESSENTIALSKILLS"
**ஆசிரியர்** : **த.பேரின்பநாயகம்**
*ஒய்வுபெற்ற பிரதிப் பொலீஸ்மா அதிபர்* - (DIG - TRAFFIC)
*(தலைவர், இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கம்)*




விபத்துக்களை வருமுன் தவிர்ப்பதற்கு இப்படியான கைநூல் ஒன்று அவசியமாகிறது. இந்நூலில் வாகனம் செலுத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தகவல்களை இலகுவான மொழிநடையிலும், விளக்கப்படங்களுடன் தரப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் தாம் பெற்ற அறிவு, அனுபவம், அயராத உழைப்புக் காரணமாக தரமான இந்நூலினை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழியிலும் வெளியிட்டுள்ளார். வீதிப்பாதுகாப்பென்பது விபத்தில்லாதிருப்பதாகும். விபத்துகள் தவிர்க்கப்படுவதால் உயிர்ச்சேதம், உடல் மற்றும் சொத்துக்கள் பாதிப்பு, செலவு, சூழல் மாசடைதல், எரிபொருள் விரயம் அது தவிர்க்கப்படுகிறது எனப்பட்டியலிடுகிறார் நூல் ஆசிரியர்.

சாரதிகளுக்கு மட்டுமல்ல பொதுமக்கள் அனைவரும் பயன்பெற இந்த உன்னதபணி உதவும். இந்நூல் யாழ்.வீரசிங்க மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்படும்போது பல சாரதிகளுக்கு இலவசமாக ஆசிரியரால் வழங்கப்பட்டது. பாராட்டப்பட வேண்டிய செயல்.

**க.கனகராசா** *(ஜே.பி.)*

**இறுவட்டு** : **முத்துச்சிரிப்பு**
**ஆசிரியர்** : **கவிஞர் சோ.பத்மநாதன்**
**இசை** : **இன்னிசை வேந்தன் பொன்.சுந்தரலிங்கம்**



பதினெட்டு ஆண்டுகளின் முன் ''நல்லூர் முருகன் காவடிச் சிந்து'' என்ற ஒலிப்பேழை வெளியீட்டில் இணைந்த கவிஞர் சோ.பத்மநாதன் - இன்னிசைவேந்தர் பொன் சுந்தரலிங்கம் என்ற இயல் - இசை இரட்டையர்கள் ''முத்துச் சிரிப்பு'' என்ற இறுவட்டை இம்முறை தந்துள்ளார்கள்.

நல்லூர் முருகன் காவடிச் சிந்து அண்ணாமலை செட்டியாரை ஞாபகப்படுத்தும் 'கண்ணன்' இசையமைப்பில் பொன் சுந்தரரின் குரல் வளத்தில் நெஞ்சை மெல்ல வருடிச் செல்லும்.

அதன் பின் சோ.4 'வடக்கிருத்தல்' என்ற சொந்தத் தொகுப்பும் (1998), 'ஆபிரிக்கக் கவிதை' (2001) 'தென்னிலங்கைக் கவிதை' (2003) என்ற மொழி பெயர்ப்பு நூல்களும் வெளியிட பொன் சுந்தரர் ஈழவிடுதலைக் கீதங்களை உலகெலாம் இசைக்கலானார். இப்பொழுது இவ்விருவருடைய கூட்டு முயற்சியால் ஈழத்துத் தலங்கள்மீது பாடப்பட்ட ''முத்துச் சிரிப்பு'' வெளிவந்துள்ளது.

பக்திப் பாடல்களாக இருந்தாலும் இவை எழுந்த காலம் போரும் அழிவும் நிகழ்ந்து கொண்டிருந்த காலமாதலின் அந்த அவலங்கள் இக்கீதங்களில் முனைப்பாகத் தெரிவது தவிர்க்கமுடியாதது.

அலை கடல் நடுவே வீற்றிருக்கும் நாகம்மை புகழ்பாடும் 'ஷண்முகப் பிரியா' ராகப் பாடல் -

**'தீயிலும் சிறையிலும் நொந்துவிட்டோம் - உன்**
**திருவடி துணையென வந்துவிட்டோம்!'**

என்று முறையிடும் ''... முடிவின்றித் தமிழர் கொடுந்துன்பப்படுவது - இன்னும் எத்தனை நாள் கண்ணா!'' என்று கண்ணனிடம் முறையிடும் மற்றொன்று பாடலாசிரியர் விட்ட இடத்திலிருந்து இசையமைப்பாளனும் பாடகனும் நம் இதய தந்தியை மீட்டித் தொடர்கின்றனர். இயலும் இசையும் தரும் படிமங்களூடாக நம் வாழ்வில் தரிசனம் கைகூடுகிறது.

நல்லூரான், சந்நிதியான், கதிர்காமக் கந்தன், கண்ணன், நாகம்மை, துர்க்கையென அருளாட்சி செலுத்தும் தெய்வங்கள்மீது பாடப்பட்ட தோத்திரங்களாக மட்டுமல்லாமல் மக்களின் புதிப்புகளின் அவலங்களின் உணர்ச்சி பூர்வமான வெளிப்பாடாகவும் இவ்விசைப் பாத் தொகுப்பு விளங்குகிறது.

**'' மூண்டபெரும் போரில் அள்ளுண்டு போவமோ**
**முகவரி இல்லாத மனிதராய் ஆவமோ - தமிழ்ப்**
**பூண்டே இல்லாமல் இம்மண் வெந்து போகுமோ**
**போதும் போதும் சாமி, ஏதும் செய் என்றுணை -**
(கந்தன் என்றே நம்பிக் கைதொழுதோம்!)

நமது சமய, பண்பாட்டுப் படிமங்களைக் கவிஞர் தாராளமாகவே எடுத்தாளுகிறார். கந்தபுராணத்தில் வரும் போர்க்காட்சியை ஒரு சரணத்தில் தருகிறார்.

**''தாருகன் மலை ஆகி வீழவும்**
**தமையன் சிங்கன் தலைகள் உருளவும்**
**சூரன் ஓடி ஒளிக்க, மாமரம்**
**சூழல, வார்கடல் சுவற, தேவர்கள்**
**ஆரவாரமிட்ட ரகரா என**
**அரிய வேல் கொடு புரியும் ஆண்மையோய்!''**

பொன் சுந்தரருடைய குரல் மேல் ஸ்தாயியில் அற்புதமாகச் சஞ்சரிக்கிறது.

**''பன்னிரண்டு கண்ணிருந்தும் பார்க்கவில்லை''**

என்ற சிவரஞ்சினி ராகப் பாடலில் பக்தனுடைய தவிப்பும் ஏக்கமும் இழையோடுகின்றன.

**''என்னுடைய பாமாலை சூடவில்லை - என்**
**இசைக்குன்றன் மயில் ஏனோ ஆடவில்லை?.....''**

இசையமைத்த டி.பி.ரமணி பாராட்டுக்குரியவர். வாத்திய இசை பாடல்களை - குரலை அமுக்காது இழைகிறது. ''வள்ளி மணவாளனுக்குப் பூங்காவனம்'' என்ற பிருந்தாவன சாரங்கா கேட்போரை மயக்குகிறது.


ஆம், ஈழத்து இயல் - இசை வரலாற்றில் ''முத்துச் சிரிப்பு'' தடம் பதிக்கிறது.

**- கந்தையா ஸ்ரீகணேசன்.**



*வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகம் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடத்திய கலை கலாசார பெருவிழாவின் 2ஆம்நாள் நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் 'கலைஞாயிறு' பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் சிறந்த நகைச்சுவை நாடக கலைஞருக்கான சான்றிதழை கிராம அலுவலர் நடராசா நாகராசாவுக்கு வழங்கி பொன் னாடை போர்த்தி வழங்குவதைப்படத்தில் காணலாம்.*

**(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)**



*ஒய்வுபெற்ற யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சம்பந்தர் சிவராசசிங்கத்துக்கு நயினாதீவு அஞ்சல் சமூகத்தினரால் நடத்தப்பெற்ற சேவை நலன் பாராட்டுவிழாவில், விழாவுக்குத் தலைமை வகித்த நயினாதீவு அஞ்சலதிபரும், சமாதான நீதிவானுமாகிய நா.க.குமாரசூரியர் தலைமையுரை நிகழத்துவதையும் சம்பந்தர் சிவராசசிங்கம் அருகே இருப்பதையும் படத்தில் காணலாம்.* (204)

# தீவிரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தோல்வி

## பதவி விலகப்போவதில்லையென பிரதமர் உறுதி



லண்டன், நவ. 12

தீவிரவாதிகளுக்கெதிராக பிரிட்டிஷ் அரசு கொண்டுவந்த புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்தாலும் தான் பதவி விலகப் போவதில்லை என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக பொலீஸாருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் இந்தச் சட்டத்தில் ஒருவரைக் கைதுசெய்தால் 90 நாள்கள் குற்றசாட்டுகள் எதுவும் பதிவுசெய்யாமல் தடுத்துவைத்திருக்கமுடியும்.

இந்தச் சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்கெடுப்பின் போது பொதுச்சபையில் இதற்கு ஆதரவாக 322 வாக்குகளும் எதிராக 392 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஆளும் கட்சியைச் சேர்ந்த 40 உறுப்பினர்களும் இதற்கு எதிராக வாக்களித்தனர்.

எனினும், தீவிரவாதச் சந்தேகநபர்களை 28 நாள்களுக்குத் தடுத்து வைத்திருக்கும் சட்டமூலத்துக்கு பொதுச்சபை ஆதரவளித்தது.

சட்டமூலத்தைச் சமர்ப்பித்து உரைாற்றிய பிரதமர் ரொனி பிளேயர்,

இந்தச் சட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் மிக மோசமான பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் நாட்டில் வாழ்வதை அனைவருக்கும் நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், சட்டமூலம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பேசிய பிளேயர், இந்தத் தோல்விக்குப் பின்னர்தான் பதவி விலகப்போவதில்லை எனவும் தனது அதிகாரம் பாதிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் பதவி விலகுவது குறித்து சிந்திக்கிறீர்களா எனக் கேட்கப்பட்ட போது அதற்குப் பதிலளித்த பிளேயர், இல்லை. எனது மூன்றாவது பதவிக்காலம் முழுவதும் பணியாற்ற விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை ஒடுக்க கொண்டுவரப்பட்ட சர்ச்சைக்குரிய சட்டம் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்துகொண்டு ஆளும் கட்சியில் உள்ளோரும் வாக்களித்ததால் தோல்வியடைந்தது. இதையடுத்து பிளேயருக்கு கடும் அரசியல் நெருக்கடி எழுந்துள்ளதாக பிரிட்டன் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கருத்து தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், குறிப்பிட்ட சட்டம் அவசியமானதே என குறிப்பிட்ட பிளேயர், பதவி விலகும் எண்ணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். அரசின் கருத்தை எம்.பிக்கள் முன்னிலையில் வைப்பது எனது கடமை. எதிர்த்தோ, ஆதரித்தோ வாக்களிப்பது அவர்களின் உரிமை என்றும் அவர் சொன்னார். பிரதமராக ரொனி பிளேயர் 1997இல் பதவியேற்றதிலிருந்து நாடாளுமன்றத்தில் அவருக்கு கிடைத்த மிகப்பெரிய தோல்வி இது என்பது குறிப்பிடத்தக்கது.

பிளேயர் சந்தித்துள்ள இப்போதைய தோல்வி அவரது ஆளுமை முடிவுக்கு வர இருப்பதன் தொடக்கம் என்று கட்சியில் அவரது எதிர்ப்பாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். (க)

உலக அரங்கில்

## ஐ.நாவுடன் ஒத்துழைக்க சிரியா இணக்கம்

பெல்கிரேட், நவ. 12

லெபனான் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரியின் கொலைபற்றி ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுவரும் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சிரிய அதிபர் பஷீர் அலி அனூத் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் லெபனான் முன்னாள் பிரதமர் ஹரிரி கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை ஐ.நா. மேற்கொண்டுவருகிறது. சிரியாவும் இது குறித்து தனியான விசாரணையொன்றை மேற்கொண்டுவருகிறது.

ஐ.நா. விசாரணைக்குழுவின் அதிகாரியான டெட்லிங் மெக்ஸிஸ் இந்தச் சம்பவம் தொடர்பாக சிரியாவின் ஆறு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தக் கோரினார். அத்துடன் மெக்ஸிஸ் இவர்களை சிரியாவிலோ அல்லது அரபு லீக்கின் தலைமையகம் உள்ள கெய்ரோவிலோ விசாரணை மேற்கொள்ள முடியும் என்ற யோசனையையும் சிரியா நிராகரித்துள்ளது.

இதுகுறித்து சிரிய அதிபர் தெரிவிக்கையில்,

ஹரிரி கொலையின் குற்றப்பின்னணியை கண்டறியும் பட்சத்தில் ஐ.நாவின் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முடியும்.

ஆனால், சிரியாவின் தேசியப் பாதுகாப்பை பாதிக்கும் எந்த நடவடிக்கைகளையும் தாம் ஏற்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காவிடின் சிரியாமீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என பிரான்ஸ் அதிபர் ஜெக் ஷிராக் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்தோனேஷிய குண்டுவெடிப்புகளின் முக்கிய சூத்திரதாரி சுட்டுக்கொலை!

தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் நடந்த பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய தீவிரவாதி அசாரி பின் ஹுசைன் நேற்றுமுன்தினம் இந்தோனேஷிய பொலீஸாருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் உயிரிழந்தார். அவர் பதுங்கியிருந்த வீட்டை இந்தோனேஷியப் பொலீஸார் சுற்றிவளைத்தபோது வீட்டுக்குள் குண்டுவெடித்ததில் அவர் இறந்துவிட்டார் என முதலில் தகவல் வெளியானது. எனினும், பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார் என பின்னர் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் ஜம்மா - இஸ்லாமியா என்ற தீவிரவாத அமைப்பு செயற்பட்டு வருகிறது. இந்த அமைப்பு ஒசாமா பின்லேடனின் அல்கெய்டாவுடன் தொடர்புடையது. ஜம்மா - இஸ்லாமியா அமைப்பைச் சேர்ந்தவர்கள் அசாரி பின் ஹுசைன், நூர்தீன் டாப் இருவரும் மலேசியாவை சேர்ந்தவர்கள். இந்தோனேஷியாவிலுள்ள பாலி நகரில் 2002ஆம் ஆண்டு நடந்த குண்டுத்தாக்குதல் உட்பட தொடர்ச்சியாக பல குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் நடந்தன. கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி பாலி நகரில் மீண்டும் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. இதில் 22 பேர் இறந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு அசாரியும், டாப்பும் தான் காரணம் என இந்தோனேஷியப் பொலீஸார் திட்டவட்டமாகக் கூறினர். இதையடுத்து அவர்கள் இருவரையும் தேடும்பணி தீவிரப்படுத்தப்பட்டது. தென்கிழக்கு ஆசியப் பகுதியில் முக்கியமான தீவிரவாதியாக அசாரி கருதப்பட்டார்.

இந்தேனேஷியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்திலுள்ள செமராங் நகரத்தில் பதுங்கியிருந்த ஒரு தீவிரவாதியை பொலீஸார் கைதுசெய்தனர்.

முக்கிய தீவிரவாதி அசாரி, அருகிலுள்ள பாடூ நகரில் ஒரு வீட்டில் பதுங்கியிருப்பதாக கைதான தீவிரவாதி தகவல் தெரிவித்தார். உடனடியாக இந்தோனேஷியத் தீவிரவாதத் தடுப்புப் பொலீஸார் பாடூ நகருக்குச் சென்று அசாரி பதுங்கியிருந்த வீட்டை நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்தனர். அருகில் இருந்த வீடுகளைச்சேர்ந்த மக்களுக்குத் தெரியாமல் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதையடுத்து அந்த வீட்டிலிருந்து பொலீஸார் மீது சரமாரியாக வெடிகுண்டுகள் வீசப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. பதிலுக்குப் பொலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் சில தீவிரவாதிகள் உயிரிழந்தனர். அதில் அசாரியும் பலியானார் என இந்தோனேஷியப் பொலீஸார் தெரிவித்தனர்.

முதலில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டுக்குள்ளேயே ஒரு குண்டுவெடித்தது. அதில் தான் அசாரி இறந்தார் எனத் தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து இந்தோனேஷியப் பொலீஸ் ஜெனரல் சுடான்டோ கூறுகையில்,

தீவிரவாதிகள் தங்கியிருந்த வீட்டுக்குள் பயங்கர குண்டு வெடித்தது. அதன்பிறகு அங்கிருந்து எதிர்ப்பு எதுவும் வரவில்லை. உடன் பொலீஸார் அந்த வீட்டின் கூரை மீது ஏறி உள்நுழைந்தனர். அங்கு அசாரி உட்பட மூன்று தீவிரவாதிகளின் உடல்கள் இருந்தன. வீட்டுக்குள் இன்னும் குண்டுகள் உள்ளன. எனவே, கவனமாகத்தான் வீட்டுக்குள் நுழைய முடியும்- என்றார்.

பின்னர் அசாரியின் உடல் மீட்கப்பட்டது. அந்த உடலின் கைரேகைகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. அதன்பின்னர் இறந்தது அசாரியே என்பதை ஜெனரல் சுடான்டோ உறுதிசெய்தார். அசாரி குண்டை வெடிக்க செய்து இறக்கவில்லை. பொலீஸ் துப்பாக்கிச்சூட்டில் அவர் இறந்திருக்கலாம் அல்லது மற்றொரு தீவிரவாதி நாட்டு வெடிகுண்டை வீச முயன்றபோது அது தவறுதலாக வீட்டுக்குள்ளேயே வெடித்து அதில் அசாரி இறந்திருக்கலாம் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)


Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7297751 முதல் 7308313 வரை சீட்டிழுப்பு இல. 184 திகதி 10-11-2005

வெற்றி எண்கள் 8 9 0 1 7 4 சுப்பர் எண் 11

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,10,54,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,10,54,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 92 | 5,000/- | 4,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 920 | 500/- | 4,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,175 | 50/- | 4,58,750/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 90,931 | 10/- | 9,09,310/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 89 | 1,000/- | 89,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 920 | 100/- | 92,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,097 | 20/- | 1,81,940/- |
| | | மொத்தம் | 42,01,000/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 48,03,600/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 11,309,875/-

தொடர் இல. 6373023 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 14 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 7303999-1-25 |
| கொழும்பு | 7306981-6-07 |
| கேகாலை | 7304349-0-82 |
| கம்பஹா | 7300373-8-27 |
| மாத்தறை | 7299174-4-89 |
| அம்பாறை | 7302586-9-45 |
| நுவரெலியா | 7301102-0-09 |
| மொனராகலை | 7300080-8-22 |


# ஆப்கானில் தீவிரவாதிகள் திடீர் தாக்கு

## 7 பொலீஸார் பலி; 2 பேரைக் காணோம்

காபூல், நவ. 12

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 7 ஆப்கான் பொலீஸார் உயிரிழந்தனர். மேலும் இருவர் கடத்தப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கந்தகார் பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் பொலீஸ்மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தினர் எனஆப்கான் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் இந்தப் பகுதியில் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்கப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சிக்கி 4 பொது மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலீஸார் மீதான தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தீவிரதேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை, காபூல் நகரில் வாகனம் ஒன்று ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதால் 16 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)




# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய கொம்பியூட்டர் (Pendium II) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.கணேசரத்தினம், சைவ பாடசாலை ஒழுங்கை, திருநெல்வேலி. T.P. 021- 222 6601. (42599)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு அம்மன் கோயில் அருகில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0094112599399. (42509)

நெல்லண்டை, தும்பளை பிரதான வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773151459. (42648)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dachshund நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் . (சி-42615)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு 19), முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42616)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும் உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42489)

## தொடர்பு கொள்ளவும்

தங்க நகை ஒன்று (ஒரு பவுண்) உடையார் லேன், பழம் றோட், கந்தர்மடத்தில் 16.10.2005 அன்று கண்டெடுக்கப்பட்டது. உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: ந.லலிதாதேவி 34/3, உடையார் லேன், பழம் றோட், கந்தர்மடம். (42667)

## சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( Green card) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு Internet மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். Penquin Bookshop, B2/F23, Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 . (சி-46105)

## வாடகைக்கு

பெண் பிள்ளைகள் தங்கியிருக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல.14, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(சி-46099)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (உதயநாகபூசணி ஆலயத்திற்கு முன்பாக) தொலைபேசி இல. 0776183288, 077 9578244 (NGO) விரும்பத்தக்கது. (42540)

## வேலைக்கு ஆள் தேவை

Page Maker, Type Setting

தெரிந்த பெண் பிள்ளைகளும் பைண்டிங் தெரிந்த பெண் பிள்ளைகளும் தேவை

தொடர்பு:

**திருவள்ளுவர் அச்சகம்**

யாழ். மாநகரசபை அருகில்,
593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(42646)(21.45.17)

## CIMA/MAY - 2006

Classes for
CERTIFICATE LEVEL
MAF, FAF,
Econo
B.Law
**Commence on 21.11.05**

Contact:
**திரு.வே.ஐ.பொன்னம்பலம்**
B.A. London, M.A.A.T.London, CIMA (Finalist). London
127/7,கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 - 222 7498

(42666) (21.45.17)

## தவறிவிட்டது

மூளாய் றோட், வட்டு மேற்கைச் சேர்ந்த சின்னராசா நகுலாம்பாள் என்பவரது தேசிய அடையாள அட்டை (676991913V) 31.10.2005 அன்று யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.077 9122 829. (42675)

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் தலிபராஜா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 840853012V), விசேட அடையாள அட்டையும் அடங்கிய பேர்ஸ் கடந்த 02.11.05 நயினாதீவிற்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். 6ஆம் வட்டாரம் நயினாதீவு T.P. 0779143197 (42657)

## தேவை

ஆங்கிலம் ஓர் அளவுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய, ஓர் அளவுக்கு சமையல் தெரிந்த பெண் சமையலாளி உடனடியாகத் தேவை. சம்பளம் 7000 ரூபா. நேரில் இன்று சமுகம் அளிக்கவும். தொடர்பு: 20, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குழி T.P. 0777172039. (42676)

## சுன்னாகம் சபாபதி முகாமில் இலவச மருத்துவ சேவை

சிவத்தமிழ் மானுட விடியற் கழகம், யாழ். லயன்ஸ் கழக அனுசரனையுடன் சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு மற்றும் சபாபதி நலன் புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளது.

இந்த முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நலன்புரி நிலையத்தில் நடை பெறும்.

இதில் நீரிழிவு, கண் பார்வைக் குறைபாடுகள், இரத்த அழுத்தம் சம்பந்தமான பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படும். அத்துடன், நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெறும்.

வைத்திய கலாநிதி எஸ்.சிவச்செல்வன் தலைமையிலான மருத்துவ மாணவர் குழு இப் பரிசோதனைகளை மேற்கொள்ளும். ரி.மகேந்திரனால் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு யாழ். துஷா கண்ணாடியகத்தினரால் கண்ணாடிகளும் வழங்கப்படும். (எ-204)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**வேலுப்பிள்ளை சின்னம்மா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21-04-1917 | 22-10-2004 |

*திதி : நவமி*

22.10.2004இல் இறைபாதமேகிய எங்கள் அன்பு அம்மா திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மாவின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் .

*நீங்கா நினைவுச் சுமையோடு வாழும்:*
பிள்ளைகள், மருமகன், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.

வே.யுகபாலசிங்கம்,
46/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குழி.

(42680) (32.17.45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு* 20 - 04 - 1940



*உதிர்வு* 12 - 11 - 2004

**அமரர் சிவசுப்பிரமணியம் செல்வமணி**

எம் அன்புத் தெய்வமே!
எங்கள் உயிருக்கு உயிரான தெய்வமே!
ஓர் ஆண்டு சென்றதுமே
எம் இல்லம் எல்லாம் இருண்டதுவே
உங்கள் மீது பாசமாய் இருந்த எங்களை எல்லாம்
பரிதவிக்க விட்டு பரமனடி சென்றாலுமே பாரினிலே
எங்களையெல்லாம் பரிதவிக்க விட்டீரே!
ஓர் ஆண்டு அல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டு அகலாது
நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை ஆசீர்வதியுங்கள்.

82/5 , பருத்தித்துறை வீதி,
மூன்றாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(42686)(26-17.45)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 17 - 11 - 1947



**மறைவு** 12 - 11 - 1993

அமரர் ***சின்னையா பத்மராஜா***

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

பிரதான வீதி,
சங்கானை.

*மனைவி,*
*பிள்ளைகள்.*

(42679) (26.45.17)

## தேவை

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் படித்த 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை!

தொடர்புகளுக்கு:

**55,57, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(42681) (21.17.45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

*தோற்றம்* 01 - 02 - 1924



*மறைவு* 11 - 10 - 2005

அமரர்
**நன்னித்தம்பி இராமநாதன்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (12.11.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

**குடும்பத்தினர்.**

(42692)(42.17.45)

## மரண அறிவித்தல்கள்



### அன்ரன் றெஜினோல்ட் பேதுருப்பிள்ளை

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் வசித்தவரும் ஆஸ்திரேலியா மெல்பேணை வதிவிடமாகக் கொண்டவருமான அன்ரன் றெஜினோல்ட் பேதுருப்பிள்ளை அவர்கள் **03/11/2005** அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிலோமினா (மலர்) அவர்களின் அன்புக் கணவரும் றோய் சிவந்தன் (கனடா), மாறி ஷெரின், மறியோ நிரஞ்சன் (மெல்பேண்), மிரியம் ஷிறோமி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் புஸ்பஜோதி சிவந்தன் (கனடா), டோனி சில்வெஸ்டர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்விந்றொஷான், சஞ்சித்றொஹான் (கனடா) ஆகியோரின் அருமைப்பேரனும், சந்திரா (கனடா), இந்திரா, கமலா, (மெல்பேண்), விக்னா (லண்டன்), சுமித்திரா, எல்மோ, சாந்தி (மெல்பேண்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெறி (கனடா), காலஞ்சென்ற மேஜர் பரம்சோதி, Dr.பாபாபிள்ளை (மெல்பேண்), யோகா (லண்டன்), கிறிஸ்ரி, றுக்கி, நெவில் (மெல்பேண்), டானியல் (இலங்கை), காலஞ்சென்ற ராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்கு இன்று (12-11-2005) சனிக்கிழமை மெல்பேண், ஆஸ்ரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்னாரது குடும்பத்தினர் வேண்டிக்கொள்கிறார்கள்.

*தகவல்:*
*திருமதி பிலோமினா பேதுருப்பிள்ளை*

*Unit 2, 33 French Street,*
*Noble Park, Victoria 3174,*
*AUSTRALIA.*
*(தொ.பே.இல:0061 3 9562 3046)*

(சி-46179)

### கிருஷ்ணபிள்ளை திரவியசிங்கம்

"ஸ்ரீபவானி", வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை திரவியசிங்கம் அவர்கள் 11.11.2005 காலை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சிவக்கொழுந்து (கோணாண்டி வளவு) ஆகியோரின் அன்பு மகனும் கி.கிருஷ்ணானந்தன் (வவுனியா), திருமதி பொ.மண்டலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் வாரியனாவளவு நவமணியின் அன்புக் கணவரும் தி.வரதராசன் (கிராம அலுவலர்), தி.சௌந்தர்ராஜன் (பிரான்ஸ்), திருமதி பவானி பொன்ராசன், தி.திலகராஜன் (பிரான்ஸ்), தி.திரவியராசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் "ஸ்ரீபவானி", வதிரி, கரவெட்டியில் நாளை (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தி.நவமணி** (மனைவி),
**தி.வரதராசன்** (மகன்),
**பொ.பொன்ராசன்** (மருமகன்).

*"ஸ்ரீபவானி",*
*வதிரி,*
*கரவெட்டி.*

(42691)(32.17.45)

# படையினரில் அதிகமானோர் ரணிலுக்கே ஆதரவாம்!

## மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ.12

''வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் முப்படை வீரர்கள் மற்றும் பொலீஸாரில் 75 சதவீதமானவர்கள் தமது தபால் மூல வாக்களிப்பின்போது ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களித் துள்ளனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பலவந்தமாக யுத்தத்தை திணிக்க முற்பட்டாலும் படையினர் யுத்தம் புரியத் தயாராக இல்லை.''

-இப்படிக் கூறுகின்றார் மேஜர்ஜெனரல் சரத் முனசிங்க.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்கள் எவருமே யுத்தத்தை விரும்பவில்லை. விசேடமாக வடக்கு - கிழக்கில் வாழ்பவர்களும் எல்லைக் கிராமங்களில் வாழ்பவர்களும் மீண்டும் ஒரு யுத்தம் வரக்கூடாது என்ற உறுதியுடன் இருக்கின்றனர். அதற்காக எதையும் செய்யத் தயாராகவும் இருக்கின்றனர்.

அதேவேளை, பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர்கூட யுத்தத்தை விரும்பவில்லை.

1997ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தினருக்குப் பெரும்பாதிப்பு ஏற்பட்டது. மாங்குளம், கிளிநொச்சி ஆகிய முகாம்களில் இருந்த படை வீரர்கள் ஓமந்தைக்குப்பின் வாங்கி வந்துவிட்டனர்.

இதனால், உயிர் சேதத்துடன் பெறுமதிமிக்க யுத்த தளவாடங்கள், பீரங்கிகள், நவீனரக ஏவுகணைகள், றொக்கட் லோஞ்சர்கள் என எல்லாவற்றையும் படையினர் இழக்க நேரிட்டது.

கடந்த இரு தசாப்த யுத்தம் இரு பகுதியினருக்குமே வெற்றியளிக்கவில்லை. படையினருக்கும்-புலிகளுக்கும் மனோ ரீதியான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில். 45 ஆயிரம்பேர் படைகளில் இருந்து தப்பி ஓடியுள்ளனர். பலர் உயிரிழந்துள்ளனர். மற்றும் ஒரு தொகையினர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை படையினர் விரும்பவில்லை. அவர்கள் விரக்தியுடனேயே இருக்கின்றனர்.

ஐ.தே.கவின் இரண்டு வருட ஆட்சியின்போது ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டார். இதன் பயனாக பல ஆயிரம் படைவீரர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. சமாதானப்பாதை திறக்கப்பட்டது. மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை எவரும் விரும்பவில்லை.

1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் திகதி படைவீரகளின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துக் கடிதம் எழுதிய சோமவன்ஸ இன்று படையினருக்காக வக்காளத்து வாங்குவது வேடிக்கையாக இருக்கின்றது.

முப்படைகளிலும் பணிபுரிபவர்கள் உடனடியாகப் பதவி விலகவேண்டும். இல்லையேல் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என அன்று படைவீரர்களின் குடும்பத்தவர்களுக்கு கடிதம் அனுப்பிய சோமவன்ஸ, இப்பொழுது படையையே கலைக்கவேண்டும் எனக் கூறுகின்றார்.

இவர்கள்தான் படையினருக்கு மனோரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இதனால், தபால்மூலம் வாக்களித்த முப்படை மற்றும் பொலீஸ் சேவையில் இருப்பவர்களுள் 75 சதவீதமானவர்கள் தாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களித்தனர் என்று கூறுகின்றனர். இதில் இருந்து படையினர்கூட யுத்தத்தை விரும்பவில்லை என்பது உறுதியாகிவிட்டது.- இப்படி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க கூறினார். (க)

## பரிசளிப்பு விழா

குடத்தனை நவ.12

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பரிசளிப்புவிழா எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் ஆரம்பப்பிரிவின் பகுதித் தலைவர் கிருஸ்ண பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார். (எ-78)

# மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் பெருவிழா

## 20 ஆம் திகதி வேம்படி மகளிரில் நடக்கும்

யாழ்ப்பாணம் நவ.12

யாழ். மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய கலை, இலக்கியப் பெருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் தோறும் நடத்தப்பட்ட தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவின் தொகுப்பாக மாவட்ட மட்ட கலை, இலக்கியப் பெருவிழா நடத்தப் படுவதாகக் கூறப்பட்டது-

இதற்கிடையில் மேற்படி விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி தலைமையில் நேற்று பிற்பகல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(எ-202-203-204)


### விண்ணப்பப் படிவம்

இலங்கை திறந்தபல்கலைக் கழகம் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

I. முன் பள்ளி ஆசிரியர்
II. எந்திரவியல் டிப்ளோமா
III. கல்வி முதுமாணி( M.Ed.)

(42806) (54-11-13)


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஸ்தாபகராகிய அருணாசல உடையார் அவர்களின் பேரனும் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் கல்வி அதிகாரியுமாகிய காலஞ்சென்ற

திரு. சு. சிவசுப்பிரமணியம்

அவர்களின் அன்புத் துணைவியார்

திருமதி பத்மாவதி சிவசுப்பிரமணியம்

அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி நிற்கின்றோம்.

(42676) (25-54-11-13) பாடசாலைச் சமூகம், யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.


### விற்பனைக்கு

2 கிறைண்டரும் ஆட்டுக் கல்லும் விற்பனைக்குண்டு.

சரஸ்வதி விலாஸ்

(42801) (54-11-13) யாழ்ப்பாணம்.


### 15ஆம் ஆண்டு நினைவினில்



மண்ணில் 08 - 08 - 1974

விண்ணில் 12 - 11 - 1990

முத்துக்குமாரு ஐங்கரன்

(வீரவேங்கை கதிர்மாஸ்டர்)

*தமிழ்மண் மீட்க தன்னுயிர் தந்த*
*எங்களவன் ஐங்கரன் எமைவிட்டுச் சென்று*
*பதினைந்தாம் ஆண்டுதனில் எம்மவனின்*
*நினைவுகளோடு நித்தம் நாம் வாழ்கிறோம்!*

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (42700) (54-11-13)

உன் நினைவில் குடும்பத்தினர்.












# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவபாதசுந்தரம்



(பீ.ஏ.(சிறப்பு) பட்டயக் கணக்காளர்)

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த கந்தையா சிவபாதசுந்தரம் அவர்கள் 08.11.2005 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.வி.கந்தையா ஜே.பி. (பிரசித்த நொத்தாரிஸ், கல்முனை - மட்டக்களப்பு)-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கனகரத்தினம் (ஜே.பி.யூ.எம் -அரச சட்டத்தரணி-யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை-யாழ்ப்பாணம்)- காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், நிர்மலா சிவபாதசுந்தரம் அவர்களின் அன்புக் கணவரும், நகுலன் சிவபாதசுந்தரம் (கனடா), துஷ்யந்தன் சிவபாதசுந்தரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி கேசவி நகுலன், திருமதி காஜால் துஷ்யந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாலசுந்தரம் (கணக்காளர்-இங்கிலாந்து), இராஜசுந்தரம் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), திருமதி டாக்டர் காந்திமதி ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டாக்டர் ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா), கனக கேசவன் (ஜே.பி.யூ.எம். சட்டத்தரணி-யாழ்ப்பாணம்), டாக்டர் சிவனேசன் (அரசினர் போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம், மருத்துவபீடம்-யாழ்.பல்கலைக் கழகம்), திருமதி விமலா விஜஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற டாக்டர் விஜஜேந்திரன்-ஜே.பி. அவர்களின் சகலனும் திருமதி சிவமலர் கேசவன், திருமதி ஜெயகௌரி சிவனேசன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''சிவஸ்தான்'' நல்லூர், யாழ்ப்பாணம்.* (42807) (54-11-13)

தகவல்: திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம் (மனைவி), க. கேசவன், (J.P.U.M) சட்டத்தரணி-மைத்துனர்).

## திருமதி செல்வரட்ணம் பூமணி



கோணவளை வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பூமணி அவர்கள் நேற்று (11.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பிள்ளை-சரவணமுத்து தம்பதியரின் அன்பு மகளும் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் அருளானந்தபகவான், ராஜ்பகவான் (மாவீரர்-றொபின்), ஈவரபகவான் (ஹொலண்ட்), உருத்திரபகவான் (ஹொலண்ட்), பகவான், ஜெயபவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும். புஸ்பா, வசந்தி (ஹொலண்ட்), செல்வி (ஹொலண்ட்), சுகிர்தா, கணேஸ்வரன் (அப்பன் -பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் நல்லம்மா, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணவளை வீதி, கொக்குவில்.* (42805) (54-11-13)

தகவல்: செல்வரட்ணம் (கணவன்).

## திருமதி ஞானசுந்தரம் இரத்தினேஸ்வரி (இரத்தினம்)



உடுவில் தெற்கு, யாமா சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசுந்தரம் இரத்தினேஸ்வரி 10.11.2005 வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லையா, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், மகாலிங்கம் (கனடா), விஜயலட்சுமி (ஜேர்மனி), நகுலேந்திரன், கேதீஸ்வரன் (உப அதிபர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், பூந்தோட்டம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (கனடா), மகாலிங்கம் (ஜேர்மனி), ஞானரஞ்சினி, விஜயலட்சுமி (திட்டப் பணிப்பாளர், புனர்வாழ்வு செயலகம், கச்சேரி- வவுனியா), ஆகியோரின் அருமை மாமியாரும் சுதாயினி, சுகந்தி, மகேந்திரன், சிறீதரன்(கனடா), ஜெகதீசன், ஜெகதீஸ்வரி, ஜெயக்குமார், பத்மரஞ்சினி, கண்ணதாசன், குலேபா (ஜேர்மனி), டிலக்ஷா, லக்ஷன், மாதங்கி, மாதூரன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனிக்கா, லக்ஸ்மன், நவீதா, கௌசியா, அபிலாஸ், ஆர்த்திக், பூமிகா, வினுஷன், விதுனா, நதீசன், சஜோனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு, யாமா சந்தி, மானிப்பாய்.* (42810) (54-11-13)

தகவல்: ஞா. கேதீஸ்வரன் (உபஅதிபர் மாகாண கூட்டுறவுச் சபை, பயிற்சி நிறுவனம், பூந்தோட்டம், வவுனியா.), ஞா. நகுலேஸ்வரன், ஞா. மகாலிங்கம் (கனடா).

## முருகன் சின்னம்மா



கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சின்னம்மா நேற்று (11.11.2005) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முருகன் -சின்னி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பன், பொன்னன், கிருஸ்ணன், வள்ளி மற்றும் முத்தி, கனகலிங்கம் (இ.மி.ச),சின்னாண்டி,சடைச்சி,இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னவன், கணபதி மற்றும் குழந்தை, செல்லம்மா, மகரம், நல்லம்மா, செல்வராணி, தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2005) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி ஊற்றலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மத்தி, கைதடி.* (42808) (54-11-13)

தகவல்: நா. தங்கராஜா (சுவிஸ்). T.P.: 0777113667

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கொத்தணி சாவடிகளில் வாக்குப்பதிவை பாதிக்குமா?

## தேர்தலின்போது ஆராயப்படும் என்கிறார் ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ.12

கொத்தணிவாக்குச் சாவடிகள் நிறுவுவது தொடர்பாக அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வடக்கு - கிழக்கிலுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளின் வாக்குப் பதிவில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்பது குறித்து ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழு. வாக்குப் பதிவின் போது ஆராயுமென்று ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ஜோன் குஷ்னகான் தெரிவிக்கிறார்.

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர் இந்த விஜயத்தின்போதே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, கொத்தணி வாக்குப்பதிவுகளில் ஏதாவது பாதிப்புகளை ஏற்படுத்தியதா என்பதை ஆராயும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

கொத்தணிவாக் குச்சாவடிகள் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது வாக்களிப்பில் மக்கள் ஆர்வத்துடன் வந்து வாக்களிப்பதை உற்சாகப்படுத்துவதாக அன்றி ஒருவித வெறுப்பை உண்டுபண்ணுவதாகவே இருக்கிறது. அல்லது வாக்களிப்பு நடைமுறையில் தாமதத்தை ஏற்படுத்துவதாயும் உள்ளது. எனவேதான், நீதிமன்றத்தின் தீர்ப்பின் தாக்கத்தை தேர்தலன்று கொத்தணி வாக்குச் சாவடிகளில் வைத்து ஆராயவிருக்கிறோம் என்று அவர் விளக்கமளித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானதும் நாங்கள் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தீர்ப்பு ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து கேட்போம்.

வாக்காளர்களை அடையாளம் காண்பதற்கான நடைமுறை நாடெங்கும் பொதுவானது. இதேபோலவே ஒருவருக்கு இருக்கும் வாக்குரிமையை பயன்படுத்துவதுமாகும். கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்களை ஏற்றி வருவதற்காக போதுமானளவு போக்குவரத்து வசதிகள் செய்துதரப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் நமக்கு உறுதியளித்தார். ஆனாலும், உயர் நீதிமன்றத்தின் தரப்பிலுள்ள சில அம்சங்கள் வாக்களிப்பில் மக்கள் ஆர்வத்தோடு கலந்துகொள்வதற்கு உற்சாகம் தருவதாக இல்லை. அல்லது வாக்குப்பதிவை தாமதப்படுத்துவதாயிருக்கிறது. இவையே எங்களது கவலை.

தேர்தல் கண்காணிப்புகளுக்கு என்று கொள்கைப் பிரகடனமொன்று ஐ.நா.வின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஐரோப்பிய யூனியன் உட்பட 21 தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் ஒப்பமிட்டுள்ளன. இந்த கொள்கைப் பிரகடனத்தில் உள்ளவாறு ஜனநாயக தேர்தலுக்கான நடைமுறைகள் இங்கு பின்பற்றி ஒழுகப்பட்டுள்ளதா என்பதை நாங்கள் அவதானிப்போம். தேர்தல் முடிவுகளை பாதிக்கும் விடயங்கள் எதுவும் இடம் பெற்றனவா என்பதையும் கணிப்போம்.''

-இவ்வாறு ஜோன் குஷ்னாகான் மேலும் தெரிவித்தார். (ஐ)



நேற்று பொலீஸார் மீது இடம்பெற்ற சூட் டுச் சம்ப வத்தை அடுத்து கடைகள் மூடப்பட்டு திருநெல்வேலி சந்தைப் பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது. *(படம்: பிரபா)*

## குழந்தையின் சடலம் ஒப்படைப்பு

கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து ஊர்காவற்றுறைப் பொலீஸாரி னால் ஒன்றரை வயது மதிக்கத்தக்க குழந்தை ஒன்றின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்னிரவு ஒப்படைக்கப்பட்ட இச்சடலம் பற்றிய மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. சடலம் மரணவிசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பொருட்டு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## மன்னாரில் ஐவர் கைது!

கிளிநொச்சி,நவ.12

மன்னார் கடலில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தன கப்பலின் சாதனங்களை அபகரித்தனர் என்று கூறப்படும் ஐவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் தென்கடலில் 1994 இல் கடற்கரும்புலிகளால் 'சாகரவர்த்தன' கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. கடலின் அடியில் மூழ்கிக்கிடக்கும் இக்கப்பலின் பாகங்களைக் சுழியோடிச் சென்று கழற்றி வந்தார்கள் என்று இந்த 5 பேர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ-12)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவிக்கவிருக்கிறாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

பூட்டான் பிரதமர் லியென்போ சங்கே கெடப், பாகிஸ்தான் பிரதமர் சவ்கட் அஸீஸ், நேபாள மன்னர் கயனேந்திரா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், மாலைதீவு ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கையூம், பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா ஆகியோரை ஜனாதிபதி சந்திரிகா தனித்தனியாக சந்திக்கவுள்ளார்.

தெற்காசிய நாடுகளின் தலைவர்மார் தங்கியிருக்கும் டாக்கா ஷெரட்டன் ஹோட்டலைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-க)

## திருநெல்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரமாக வெளியேறினர். அப்பகுதியில் வர்த்தக நிலையங்களும் இழுத்து மூடப்பட்டன.

இந்தச் சூட்டுச்சம்பவத்தில் உயிரிழந்த கான்ஸ்டபிள் கேகாலையைச் சேர்ந்த எஸ். பி.சேனநாயக்க(வயது 34) என அடையாளம் காணப்பட்டார். (ஐ-7-13-12-86)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட கருணா அணியின் பிளவு மற்றும் தமிழர்களின் போராட்டத்துக்கு எதிராக சர்வதேச ரீதியில் ஏற்பட்டுத்தப்பட்ட ராஜதந்திர வலைப் பின்னல் என்பன ரணில் விக்கிரமசிங்கவின் சாதனைகளே என்று சாரப்பட நவீன் திஸநாயக்கா, மிலிந்த மொறகொட ஆகியோர் கட்டுக்கதைகளைப் பரப்பிவருகின்றனர்.

தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சார்பானவராக ரணில் செயற்படுவதை விரும்பாத சக்திகள் கட்சித் தலைமையில் இருந்து அவரை அகற்ற முயற்சிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கக் கூடிய சுமார் 13 லட்சம் தமிழர்களின் வாக்குகளை திசைதிருப்பும் நோக்கில் அவருக்கு எதிராகப் பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. - என்றும் மகேஸ்வரன் தனது உரையில் குறிப்பிட்டார். (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஏற்பட்டதையடுத்து மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் விமானி அதனை தரை இறக்க முற்பட்டார். ஆனாலும் உரிய இடம் கிடைக்காத நிலையில் சேறு நிரம்பிய வயல் வெளியில் அதனை தரை இறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எவ்வாறாயினும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிரதமரை பத்திரமாக அருகிலுள்ள பாடசாலை ஒன்றுக்குக் கூட்டிச் சென்றனர். பிரதமர் வந்திருப்பதை அறிந்த குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களும், ஊர்மக்களும் அங்கு வந்து அவரை உபசரித்தனர்.

இதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்றுகொண்டிருந்த ஹெலிகொப்டர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை தரையிறங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## யாழ். சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்ட மற்றைய கைதியான ராமசாமி சுபேந்திரன் என்பவர் சுமார் ஒருமாத காலத்துக்கு முன்பு வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் ஒளிந்திருந்த சமயம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இவர், பின்னர் இளவாலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

மல்லாகம் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்பேரில் பின்னர் இவர் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கைதிகள் இருவரையும் விடுதலைப் புலிகளே பாதுகாப்பாக மீட்டுக் கடத்திச் சென்றிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதிகள் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து யாழ்.சிறைச்சாலைச் சூழலில் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டனர். அந்தப் பகுதியில் தீவிர கண்காணிப்பு மேற்கொள் ளப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்த வந்த விசேட பொலீஸ் குழு ஒன்று உடினடியாக விசாரணைகளை ஆரம்பித்தது.

சிறையிலிருந்து மீட்கப்பட்ட கைதிகள் இருவரும் யாழ்.மாவீட்டத்துக்கு வெளியே தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்ப்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

யாழ். சிறைச்சாலையின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-7-13-12-410)

## 72 பாடசாலைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இன்றைய தமிழ் மாணவர்களின் கள நிலை' என்னும் தலைப்பில் ஹாட்லிக் கல்லூரி மாணவர் எஸ்.நவராஜும், 'பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் என்.விஜயரூபனும் 'தமிழ் பாடத் திட்டத்தில் மறைக்கப்படுபவையும் நீக்கப்படுபவையும்' என்ற தலைப்பில் கல்வியியற் கல் லூரி உப பீடாதிபதி இ.தனபாலனும், 'இலங் கையின் கல்விக் கொள்கைகளில் உள்ள குறைபாடுகள்' என்ற தலைப்பில் யாழ். இந் துக் கல்லூரியைச் சேர்ந்த ப.சந்திரகுமாரும், 'தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை களும் அது மாணவர்களைப் பாதிக்கும் வித மும்' என்னும் தலைப்பில் தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ். அருந்தவபாலனும் 'சுனாமியும் மாணவர்களும்' என்னும் தலைப்பில் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் உரைகளை நிகழ்த்தினார்கள்.

இதன்பின்னர் தமிழ் மாணவர்களின் பிரச்சினை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டுவதற்கான பிரகடனம் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்தமாநாட்டில் தமிழ் மாணவர்களது எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக குழுக்களும் அமைக்கப்பட்டன. குடாநாட்டு உயர்தரப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த மாநாட் டில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களான எஸ்.கஜேந்திரன், கி.சிவனேசன் மற் றும் பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள் ஆகி யோரும் இதில் கலந்துகொண்டனர். (ஐ-8-7-86)

## அவசரகாலச் சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், தேவைப்பட்டால் - அவசரம் அல்லது அவசியம் ஏற்பட்டால் - இருவரும் கலந்துரையாடி அவசரகால நிலைமையைப் பிறப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பது என்றும் -

அப்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அறிய வந்தது.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு விவகாரத்தில் அவர்கள் சுதந்திரமாக - சுயாதீனமாக - வாக்களிப்பதற்கு குந்தகம் விளைவிக்கும் ஏற்பாடுகள் ஏதும் நீதித்துறை மூலம் செய்யப்படுமானால் அதை முறியடிப்பதற்கு, அவசரகால நிலைமையையும் அதன்கீழ் விசேட சட்ட - ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தையும் தேர்தலுக்கு 24 மணி நேரத்துக்கு முன்னர் முழு அளவில் பிரயோகிப்பதற்கு தயாராக இருக்கவேண்டும் என்றும் - இரு தலைவர்களும் தீர்மானித்திருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இந்தத் தீர்மானம் குறித்துச் சாடை மாடையாகத் தகவல் கோடி காட்டப்பட்டிருந்ததாகவும் கூட அறிய வந்தது.

அந்த பின்னணியில்-

இப்பிரச்சினை இப்போது சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டதாக சம்பந்தப்பட்ட தலைவர்கள் கருதுகின்றனர் என் றும்-

எனவே,அந்த விவகாரத்துக்காக அவசர கால நிலையை மீளப் பிறப்பிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்படவில்லை என்று அவர்கள் முடிவுசெய்திருக்கின்றார்கள் என்றும் - தெரிகின்றது.

எனினும், இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு, சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டவும், நீதியான தேர்தல் நடத்தப்படுவதை உறுதிப் படுத்தவும் தேவைப்பட்டால் அவசரகாலச் சட்டத்தை வாக்களிப்புக்கு முன்னரோ, வாக்களிப்பின்போதோ அல்லது அதன் பின்னரோ, பிறப்பிக்கத் தாம் தயங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருக்கிறார் என அறிய வந்தது. (ஐ-க)

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பித்து விட்டீர்களா?
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
விண்ணப்ப முடிவுத்திகதி 20.11.2005
இயக்குநர்
IIS,யாழ்ப்பானம்

SKY COMPUTER SYSTEMS.
89A, Kandy Road, Jaffna.
Tel: 0777 305533
For all your Computer Requirements
Pentium IV Pentium III Pentium II
Genuine Intel Dealer
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
15,000/-
17" Monitor - 8,500/-
ஒரு வருட உத்தரவாதம்
Monitor தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அமெரிக்கா LOTTERY விசா விண்ணப்பிக்க தொடர்பு கொள்க
E-Mail: skymathy@sltnet.lk
(கச்சேரிக்கு அருகில்)

NIRU TUTION CENTRE
Kondavil.
இலத்திரனியல்
By:
M.கருணாநிதி
Sat, Sun : 5.00-6.00
ஆரம்பம்:-
12.11.2005

Bachelor of Information Technology
Semester III & V
BIT கற்கைநெறிக்கான
Semester III மற்றும் V ற்கான
விரிவுரைகள் எதிர்வரும் 19.11.2005
சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளன.
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P : 021 222 8060

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.